Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-08 22-05-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 93

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்
T.P: 024-222 4247

### திருமலை கடற்படைத் தளத்தில் சனாதிபதியின் ஏற்பாட்டில்

# அரசாங்கம் கூட்டிய உயர்மட்ட மாநாட்டை

# புத்தர் சிலையை நிறுவிய அமைப்பு புறக்கணிப்பு

## பௌத்த பிக்குகளும் பங்கேற்கவில்லை

(திருகோணமலை)

**திருகோணமலைநகர் பேருந்து நிலையமருகே நிறுவப்பட்ட புத்தர்சிலை தொடர்பாக நேற்று திருகோணமலை கடற்படைத்தளத்தில் அரசாங்கத்தால் கூட்டப்பட்ட உயர்மட்ட மாநாட்டை புத்தர் சிலையை இங்கு நிறுவிய முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினரும் பௌத்தகுருமாரும் புறக்கணித்துள்ளனர். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்பிற்கு இணங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன தலைமையில் சுமார் நான்கு மணி நேரம் இம்மாநாடு நடத்தப்பட்டது.**

திருகோணமலை நகரில் பேருந்து நிலையமருகில் புத்தர் சிலை நிறுவப்பட்ட விவகாரம் தொடர்பாகவும், அதனை அகற்றக்கோரி திருமலை நகரில் ஐந்து நாட்களாக நடத்தப்பட்டு வரும் கதவடைப்புப் போராட்டம் தொடர்பாகவும், நேற்று திருகோணமலை கடற்படைத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஐந்தாவது நாளாக நேற்றும் இயல்புநிலை பாதிப்பு

புத்தர்சிலை நிறுவிய விவகாரம் தொடர்பாக திருகோணமலை நகரில் ஐந்தாவது நாளாக நேற்று சனிக்கிழமையும் இயல்புநிலை பாதிக்கப்பட்டது. அநுராதபுரம் அன்புவழிபுரம் சந்தியிலும் மடத்தடிச்சந்தியில் நேற்று சனிக்கிழமை இரண்டு குண்டுகள் வெடித்தன. சேதங்கள் ஏற்படவில்லை என்று பொலிசார் தெரிவித்தனர்.

சர்ச்சைக்குரிய புத்தர் சிலை அமைக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லும் ஏகாம்பரம்வீதி, மத்தியவீதி, பிரதான வீதி, கடற்படைத்தள வீதி ஆகியவற்றில் வெளிமாவட்டங்களில் இருந்து படையினர் மற்றும் பொலிசார் கொண்டு வரப்பட்டு குவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. புத்தர் சிலை அமைந்துள்ள பஸ் நிலையப்பகுதியிலும் சனநடமாட்டம் குறைந்த அளவில் காணப்பட்டது. நகரசபைக்குச் சொந்தமான மீன், இறைச்சிச் சந்தை, காய்கறிச்சந்தையில் ஒருசிலரே காணப்பட்டனர். நகரின் சில பகுதிகளில் மின் விநியோகம் தடைசெய்யப்பட்டிருந்தது. (25)

## அரசியல்துறை அலுவலகம் மீது பெரியகல்லாறில் தாக்குதல்

### -வயோதிபப் பெண் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்முனை வீதியிலுள்ள பெரியகல்லாறில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீது நேற்று இரவு 7.30 மணியளவில் இனந்தெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 65 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

கொல்லப்பட்ட பெண் அலுவலகத்தில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகள் போராளிகளுக்கு இரவு உணவு (12ஆம் பக்கம் பார்க்க)

## கைவிடப்பட்ட இராணுவ முகாமிலிருந்து பெண்ணின் எலும்புக்கூடு மீட்பு

வடமராட்சி கிழக்கின் குடத்தனைப் பகுதியில் கைவிடப்பட்ட இராணுவ மினிமுகாம் சூழலில் இருந்து பெண்ணின் எலும்புக்கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் கட்டட வேலைகளிற்கான மணல் அகழும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே இவ் எலும்புக்கூட்டைக் கண்டுபிடித்துள்ளனர்.

இது தொடர்பாக உடனடியாக பருத்தித்துறைப்பொலிசாருக்கு அவர்களால் தகவல் வழங்கப்பட்டிருந்தது. பருத்தித்துறை மாவட்ட நீதவான் க.அரியநாயகத்திற்கு இது தொடர்பாக பொலிசார் தகவல் தெரிவித்ததையடுத்து பருத்தித்துறை மாவட்ட வைத்தியஅதிகாரி வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை சகிதம் அவர் நேற்று சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை களை மேற்கொண்டார்.

குறித்த எலும்புக்கூடு சுமார் 25 முதல் 40 வயதிற்கிடைப்பட்ட பெண்ணொருவருடையதாக இருக்கலாமென கருத்துவெளியிட்ட வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை சுமார் ஒன்றரை வருட காலப்பகுதிக்கு முன்னர் அப்பெண் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாமெனவும் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலுக்கு அதிரடிப்படையே பொறுப்பு; மட்டு.அம்பாறை அரசியல்துறை குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பெரியகல்லாறு விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரே பொறுப்பு என மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறையினர் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் மாவட்ட ஊடகத் துறைப் பொறுப்பாளர் செல்வன் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கையில்;

கல்லாறு பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் சோழனின் நடமாட்டத்தை கடந்த சில தினங்களாக விசேட அதிரடிப்படையினர் அவதானித்து வந்ததாகவும் அவரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதலை அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள் என்றும் கூறியுள்ளார்.

## வீரவணக்கம்

26.12.2004 அன்று ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் - அரசரெத்தினம் (சின்னத்தம்பி - அரசரெத்தினம், சொந்த இடம்:- பனங்காடு, அக்கரைபற்று. தற்காலிக இடம்:- குருகுல வீதி, தம்பிலுவில், இல-02 அம்பாறை) என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்துள்ளார்.

10.05.2005 அன்று சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் - குமாரவேலு (அம்பலவாணர் - குமாரவேலு, சொந்த இடம்:- கச்சேரி வீதி, நல்லூர், யாழ்ப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இசைப்பாடல்கள் இறுவட்டுகள் நேற்று வெளியிட்டு வைப்பு




(அலுவலக செய்தியாளர்)

நிதர்சனம் நிறுவன தர்மேந்திரா கலையக உருவாக்கத்தில் இசைப்பிரியனின் இசையில் உருவான ஜெயந்தன் படையணியின் "வெல்லும் வரை செல்வோம்" மற்றும் சோதியா படையணியின் விழி நிமிர்த்திய வீரம்" ஆகிய இசைப் பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்கள் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டன.

மாலை 5.00 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாகப் பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் (12ஆம் பக்கம் பார்க்க)

## போராளியும், உதவியாளரும் பொலிசாரால் கைது


(அம்பாறை)

அம்பாறை வைத்தியசாலையில் உந்துருளி விபத்தில் சிக்கி காயங்களுடன் கடந்த புதன்கிழமை அனுமதிக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகள்போராளியையும் அவருக்கு உதவியாகச் சென்றவரையும் சிறிலங்கா பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மீது குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி நீதிமன்றில் முற்படுத்துவதற்கான முயற்சிகளில் பொலிசார் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



# அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய
# தேர்த்திருவிழா சிறப்பிதழ்
## 22-05-2005



## சர்வதேச இந்துமத குருபீடாதிபதியின் ஆசியுரை

உலகின் ஸ்ரீமாதாவாகவும் ஜகன்மாதாவாகவும் புவனத்திற்கு ஈஸ்வரியாகவும் விளங்கும் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் சௌந்தர்யப் பெண்ணாக சித்திரத்தேரில் இன்று ஆரோகணித்து வருவதையிட்டு இச் சிறப்பிதழுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஊருக்குச் சிறப்பு ஆலயம். அவ்வாலயத்தின் கருவறையிலுள்ள மூலவர் உற்சவமூர்த்தி என்ற பெயருடன் ஆலயத்திலிருந்து வெளிப்புறத்தில் வீதியுலாவாகி வெளிவருவதை உற்சவம் என்று காரணாகமம் குறிப்பிடுகிறது. மேலும் ஐந்து நாட்களுக்கு மேல் தொடர்ந்து செய்யும் வீதியுலா "மகோற்சவம்" அல்லது "பிரமோற்சவம்"எனப் பெயர் பெறும்.

இவ் உற்சவத்தின் பெரும் திருவிழாவாக ஸம்ஹாரம் என்றும் அழித்தலைக்குறித்து நடத்தப்படும் உற்சவம் ரதோற்சவம் எனப்படுகிறது. ரதோற்சவத்தின் மிகவும் சிறப்பானதாகவும், முக்கியமானதாகவும், ஒற்றுமையின் இடமாகவும் ஆலயத்தின் கண்விளங்குவதைக் காணலாம். இதனையே "ஊர்கூடித் தேர்வடம் பிடிப்போம்" என்னும் உயர் சிந்தனை கொண்ட முதுமொழியினால் அறிய முடிகிறது.

ஒரு நாட்டில், ஒரு ஊரில், ஒரு கிராமத்தில் ஆலய உற்சவமும், ரதோற்சவமும் இனிது நடைபெற்றால் ஊருக்குச் சிறப்பு, நாட்டுக்குச் சிறப்பு,மக்களுக்குச் சிறப்பு, அரச நீதிக்குச் சிறப்பு, மக்களின் மகோன்னத வாழ்வுக்கு வீடு பேறு, செல்வச் செழிப்பு என ரதோற்சவத்தின் பலன்கள் பலவாறு கூறப்பட்டுள்ளன.

இவ்வகையான பல்வேறு சிறப்புகளைக் கொண்ட ரதோற்சவம் எமது ஊரின் புனித கேந்திரஸ்தானமாகவும், புவனேஸ்வரி மூர்த்தமாகவும், சக்தி பீடமாகவும் விளங்கும் அன்னை பராசக்தி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் வெகுசிறப்பாக நடைபெற அம்பிகை திருவருள் கைகூடியுள்ளது.

தங்குசங்களை, வற்றாப்பளை, மனோன்மணி என்னும் வரலாற்றைச் சிறப்பித்து புவனேஸ்வரியாக அம்பிகை நாமம் கொண்டு சிங்காரரஸ ஸம்பூர்ணாவாக அலங்கரிக்கப்பட்டு வேண்டுவார் வேண்டுவதை அதிகம் கொடுக்கும். வாஞ்சிதார்த்தப் பிரதாமினியாகவும் அறியாமையைப் போக்கும் அவ்யாய கருணா மூர்த்தியாகவும் அம்பாள் தேரில் ஆரோகணித்து வருகிறாள்.

"அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" என்ற அனுபூதி மஹான்களின் வாக்குக்கேற்ப நாட்டு மக்கள், ஊர்மக்கள், அம்பிகை அடியார்கள்,ஆலய தர்மகர்த்தாக்கள், இளைஞர்கள், மாணவ சமூகத்தினர் என எல்லா அனைத்து மக்களும் அன்னை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளைச் சரணடைந்து அம்பிகையின் பரிபூரணமான அனுக்கிரகத்தைப் பெறவேண்டுமென பிரார்த்தித்து இந்நன்நாளில் ஆசிகள் பல கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள்.**
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
பிரதம குரு, சுதுமை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்.




பல தசாப்தங்களுக்கு முன்னமே சுதுமலைப் பகுதியிலே தங்குசங்களை, வற்றாப்பளை, பின்பு பர்வதவர்த்தனி மனோன்மணி என்ற திருநாமத்துடன் தோன்றிய எம் குலதெய்வம் இன்று ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையாகி அருள்பாலித்து வருகிறாள்.கடல் சூழ் இலங்கை கஜபாகு வேந்தன் காலத்தில் முக்கியத்துவப்படுத்தப்பெற்ற கண்ணகி அம்பிகை வழிபாட்டோடு தொடர்புடைய நம் அம்பிகை நாகரூபினியாகப் பேற்றப்பட்ட வரலாறும் பேசப்படுகின்றன.

மூர்த்தி, தீர்த்தம், தலம் ஆகிய சிறப்புக்கள் பொருந்தப் பெற்ற சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரித்தாய், பூத்தவளாய் புவனம் பதினான்கினையும் காப்பவளாய், கரப்பவளாய், மூவாமுகுந்தனுக்கு இளையவளாய் எம் கிராமத்தை காத்துவரும் காவற்தெய்வமாகவும் விளங்குகின்றாள்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்று சிலப்பதிகாரம் கூறுவதுபோல, நம்மவரை நாட்டின் நம்மண்ணில் அரசியல் வெற்றிக்கு யார் இடையூறு செய்கிறார்களோ அவர்களை நெறிகாட்டியும், வழிப்படுத்தியும் காக்கவல்லவள். 30.04.1999 கும்பாபிஷேகம் செய்யப்பட்ட காலம் முதல் புதுப்பொலிவுடன் விளங்கும் எம் அம்பிகை இந்த ஆண்டு அருட்திருச் சக்தியாய் சகல ஜீவதயாநிதியாய் சித்தி ரதமேறி வரும் அருட்காட்சி அற்புதமானது.

அழகிய சிற்பங்களுடன் ஓங்கியுயர்ந்த கோபுரத்தையுடைய சுதுமலை அம்பிகை ஆலயமே அசைந்தாடி வருவது போன்ற பிரமைதரும் அந்த அற்புதமான காட்சியை வைகாசி விசாக நட்சத்திரமும் பூரணைத்திதியும் கூடிய இன்று (22.05.2005) ஞாயிற்றுக்கிழமை காணலாம். சிவனேஸ்வரி அம்பிகைக்கு (நாளை 23..05.2005) காலை 10.00மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

எல்லாம் வல்ல அம்பிகைக்கு ஊரே திரண்டு உரிமையுடன் பயபக்தியாக எடுக்கும் பிரம்மோற்சவம் சிறந்து அருள்பெருக, அனைத்து வளமும் பெருக அம்பிகையை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.கு. கணேசதாசன் (JP)**
தலைவர், சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்.

சிறப்பிதழாக்கம் காரைநகரான்

## ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளின் அருட்கருணை எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்!


தர்மரூபன் பல்பொருள் வாணிபம்
யாழ்வீதி, மானிப்பாய். (சி-11918)

மோகன் வீடியோ அன் ஸ்ரூடியோ
டிஜிட்டல் வீடியோ படப்பிடிப்பு, கலர், கறுப்புவெள்ளை படப்பிடிப்பு.
(சி-11919) யாழ். வீதி, மானிப்பாய்.

பிரம்யா நகைமாடம்
அழகிய தங்க நகைகளை பெற்றுக்கொள்ள நாடுங்கள்
யாழ். வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
தொ. பே: 0212223600
(சி-11920)

ஒக்ஸ்போட் விற்பனை நிலையம்
ஆனைக்கோட்டை சந்தி, ஆனைக்கோட்டை. (சி-11923)

யோய்ஸ் மருந்தகம்
ஆங்கில மருந்து விற்பனையாளர்
(சி-11922) பிரதான வீதி, மானிப்பாய். தொ. பே0212222754

மூர்த்தி ஸ்ரூடியோ அன் டிஜிரல் கலர்லாப்
62/16.ஸ்ரான்லி வீதி. (பழைய தபால் கந்தோர் ஒழுங்கை) யாழ்ப்பாணம். தொ.பே.0714168475
பிரதான வீதி, மானிப்பாய். தொ. பே:0212222884
(சி-11921) E.mail: moorthylazer@yahoo.com

தரன் மோட்டோர்ஸ்
மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனையாளர்.
யாழ். வீதி, மானிப்பாய்.
தொ. பே: 0777240299 (சி-11924)

ஐங்கரன் மோட்டோஸ்
மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி, ஆட்டோ, வாட்டர் பம், உதிரிப்பாக விற்பனையாளர்.
சந்தை அருகாமை, மானிப்பாய்.
தொ. பே: 0212225412 (சி-11925)

சிவா மல்ற்றி சென்ரர்
பாதணி வகைகள், எலற்றோனிக்ஸ் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், அன்ரனா வகைகள், கைத்தொலைபேசி வகைகள், மணிக்கூடு வகைகள், பிளாஸ்ரிக் கதிரைகள், ரெயிலறிங் பொருட்கள் என்பவற்றினை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். வீதி, மானிப்பாய்4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.
தொ. பே: 077 6916926 (சி-11926)

PC SYSTEMS
TOTAL IT SOLUTION PROVIDERS
Computer Sales, Services & Maintenance, Software Installation & Development, CD Sales and Recording
Institute of Computer & Electronic Studies
Manipay South, Manipay, Jaffna, Sri lanka. T.P:021451525
(சி-11929)

அபினயா மல்ற்றி எலக்ரோனிக்ஸ்
Computer Sales & Service Computer Accessopies Sales, SoftWare Development, Photo Editing, Scanning, DVD Writing, VHS to DVD Transfer, CD Copying, VHS to Transfer & TV,VHS, to CD Players, Radio Blank Cd's & other Electronic Ltems For Sales.
இல.169, யாழ்.வீதி, மானிப்பாய். தொ.பே: 071381126
(சி-11928)

விதுஜன் எலெக்ரோனிக்ஸ்
(VIDEO &AUDIO)
jaffna to Colombo to Jaffna Van For Hire
AND ALL SRILANKA TOUR
யாழ்.வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
(சி-11927) தொ.பே:021-4591638,0777-111348

NP EB ஈஸ்வர-பாமினி
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
நகைப் பூங்கா
தங்க வைர நகைவியாபாரம்
யாழ். வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
(சி-11930)

சுந்தர்சன்
மின்சாதனங்கள், மின்இணைப்பு உபகரணங்கள், அன்டன் பி.வி.சி. குழாய்கள், அபான்ஸ் ஸ்தாபனத்தின் உற்பத்திப்பொருட்கள், தொங்கவிடும் மின்விளக்குகள், சுவர் விளக்குகள்.
இவைஅனைத்தையும் தெரிவுசெய்து பெற்றுக் கொள்ள நாடுகள்.
பிரதான வீதி, மானிப்பாய்.
தொ. பே: 021:2222751 (சி-11931)

பிரேம் நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.
யாழ். வீதி, சந்தையடி, மானிப்பாய். தொ. பே:077:3039572
(சி-11932)

## இயற்கை பேரழிவுத் தகவல் அறிய தாய்லாந்து ஏற்பாடு

(பாங்கொக்)

சுனாமி உள்ளிட்ட இயற்கைப் பேரழிவு குறித்த தகவலை பொதுமக்கள் அறியும் வகையில் தொலைபேசி உதவி மையத்தை தாய்லாந்து அரசு நிறுவியுள்ளது.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் இன்னும் ஓரிரு நாட்களில் செயற்படவுள்ள இந்த தேசிய இயற்கைப் பேரழிவு எச்சரிக்கை மையத்தை பார்வையிட்டபின், அதன் தலைவர் ஸ்மித் துமாசரோச் கூறியதாவது;

இந்த மையத்தின் மூலமாக இயற்கைப் பேரழி குறித்த எச்சரிக்கைகள் வெளியிடப்படும் இந்த மையம் 24 மணி நேரமும் செயற்படும் இந்த மையத்தின் பணியாளர்களாக பல்வேறு ஏஜன்சிகளைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப் படுவார்கள்.

"1860 என்ற எண்களை தொலைபேசியில் டயல் செய்தால் பொதுமக்களுக்கு இயற்கைப் பேரழிவு குறித்த தகவல்கள் தெரிவிக்கப்படும்.

முன்னதாக, வியாழக்கிழமை சுமத்திராவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் கருவியில் 6.8 ஆக இருந்தது. இந்த நிலநடுக்கத்தால் பாங்கொக் நகரில் உயரமான கட்டடங்கள் இடிந்து விழுந்தன.



அமெரிக்க புனித குரானை இழிவு படுத்தியதைக் கண்டித்து ஈரானில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் புனித நூலின் ஒரு பிரதியை முன்னால் ஏந்திச் செல்லும் ஒருவர்.

# அடுத்த 10 ஆண்டுகளில் சுனாமியால் அவுஸ். கிழக்கு கரையோரம் அழிந்து விடும்!

### ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை

**(கான்பெரா)**

**சுனாமிப் பேரலை தாக்கி, அடுத்த பத்து ஆண்டுகளில் அவுஸ்திரேலியாவின் கிழக்குக்கடலோரப் பகுதி அழிந்து விடும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.**

அவுஸ்திரேலியாவில் பூகம்பம் ஏற்படாது,சுனாமி பூகம்பம் ஏற்படாத பாதுகாப்பான பகுதியில் அது இருக்கிறது என்பது தவறான நம்பிக்கையாகும். பூகம்பம் ஏற்படும் பகுதியில் தான் அவுஸ்திரேலியா இருக்கிறது" என்று குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகப் பேராசிரியர் பீட்டர் மோரா கூறுகிறார்.

அவுஸ்திரேலியாவைச் சுற்றிலும் எண்ணாயிரம் கி.மீற்றருக்கு உறுதியற்ற பாறைகள் உள்ளன. இந்தப் பாறைகள் பூமி அதிர்ச்சியையும், சுனாமியையும் ஏற்படுத்தக் கூடியவை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

உலகின் மூன்றில் ஒரு பகுதி பூகம்பங்கள் இந்தப்பகுதியில்தான் ஏற்படுகின்றன. கடந்த ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமி இந்தியாவைத் தாக்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு 8.1 ரிச்டர் அளவுள்ள பூகம்பம் நியூசிலாந்து அருகே ஏற்பட்டது. அது அவுஸ்திரேலியாவின் பல பகுதிகளிலும் உணரப்பட்டது.

அமெரிக்காவிலுள்ள எங்கள் சர்வதேச ஆராய்ச்சி பங்குதாரர்கள் "அடுத்த பத்து ஆண்டுகளில் ஏழு ரிச்டர் அளவுக்கு பூகம்பம் நியூசிலாந்தின் வடக்குப் பகுதியில் ஏற்படும், இதனால் உருவாகும் சுனாமி அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கடலோரப் பகுதியைத் தாக்கி அழிக்கும் " என்று எச்சரித்துள்ளனர். ரிச்டர் அளவில் ஒவ்வொரு அலகும் உயரும் போது, 30 மடங்கு அதிகமான சக்தி பூகம்பத்தால் வெளியேற்றப்படுகிறது. 8.6 ரிச்டர் பூகம்பம் என்றால் அது பத்து ஆயிரம் அணு குண்டுகளுக்குச் சமமானதாகும்.

இதனால் 250 கோடி ரூபாய் மதிப்புள்ள சுனாமி எச்சரிப்புக் கருவியைப் பொருத்த அவுஸ்திரேலிய அரசு திட்டமிட்டுள்ளது.

இதேவேளை நியூசிலாந்து நாட்டைப் பூகம்பமும், சுனாமியும் கடுமையாகத் தாக்கும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து நாட்டிலும், அதைச் சுற்றிலும் ஒவ்வொரு ஆண்டும் 14 ஆயிரம் பூமி அதிர்ச்சிகள் ஏற்படுகின்றன. அவற்றில் 100 முதல் 150 வரையான பூகம்பங்கள் மட்டுமே மக்களால் உணரும்படி இருந்தன.

நியூசிலாந்துக்கு வடக்கே பெரியளவில் பூகம்பம் உருவாக வாய்ப்புள்ளது. இதனால் ஏற்படும் சுனாமி அவுஸ்திரேலியாவின் கிழக்கு கடலோரப் பகுதியை அழித்துவிடும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



பிரிட்டிஷ் இராணுவத்தினரின் காவலில் இருந்த போது ஈராக் அதிபர் சதாம் ஹசேன் அரை நிர்வாணமாக்கப்பட்டதாக சண் சஞ்சிகை செய்தி வெளியிட்டிருக்கும் நிலையில் டுபாயில் செய்மதி தொலைக்காட்சியை ரசிக்கும் சிறுவர்கள்.




ஈராக் முன்னாள் அதிபர் சதாமின் அரை நிர்வாணப் படம் பிரசுரமான சன் பத்திரிகையை பார்வையிடும் ஒருவர்.

# அமெரிக்க படையினர் அட்டகாசம் ஆப்கான் பிரதமர் கடும் கண்டனம்



ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தினர் அங்கு சிறைவைக்கப்பட்டிருந்த இரண்டு ஆப்கானிஸ் தானியர்களைக் கொன்று மேலும் பலரைக் கடுமையாக சித்திரவதை செய்துள்ளதையும் பிரதமர் ஹமிட்கர்ஷாயில் வன்மையாக கண்டித்துள்ளார்.

மேற்படி தகவல்கள் இராணுவத் தரப்பிலிருந்து கசிந்துள்ளதாக நியுபோர்ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது. கர்ஷாய் தற்போது நான்கு நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். இவ் விஜயத்தின் போது கடந்த வாரம் சர்ச்சையை ஏற்படுத்திய குர்ஆன் விவகாரத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றியும் ஆராயவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நியூயோர்க்கிலுள்ள மனித உரிமை கண்காணிப்புக்குழு முழுமையான விசாரணை நடத்தாமல் குற்றச் சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளது. எனினும் விசாரணை மேற்கொள்ள குழுவொன்றை அமைக்க வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

. ஹமிட் கர்ஸாப் 2001 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானின் பிரதமராக வந்தது முதல் அமெரிக்கா மீது குற்றம் சுமத்திவருகிறார். இந்த விவகாரம் தொடர்பாக ஏழு அமெரிக்கப்படையினர் ஏற்கனவே குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த பின்னர் இறந்த 22 வயதான திலாவர் என்ற அப்பாவி இளைஞர் இறப் பதற்கு முன்னர் அளித்த வாக்கு மூலத்தில் தான் இரண்டு கைகளும் கட்டப்பட்ட நிலையில் தாக்கப்பட்டு நான்கு நாட்களாக அறையில் பூட்டி வைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.






வெள்ளை மாளிகையில் கிறிஸ் நாட்டுப் பிரதமர் கொஸ்டாஸ் கரமனில்சை வரவேற்கும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்.

## பனிப்புயலில் சிக்கி சிலியில் 41 இராணுவம் பலி

சிலியின் மலைப்பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் திடீரென்று பனிப்புயலில் சிக்கியதில் 41 இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். பனிப்பாறைகள் சரிந்து விழுந்ததாலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது. பனிப்புயல் வீசும் நேரத்தில் அங்கு பயிற்சிக்குவீரர்களை அழைத்து சென்ற இராணுவ அதிகாரிகள் மீது அதிபர் ரிகார்டோ கரிகார்டோ லாகோஸ் அதிருப்தி அடைந்துள்ளார்.

# ஒசாமாஉயிருடனேயே உள்ளார் அவர் அலைந்து திரிவதாகவும் தகவல்

அல்- ஹைறதாத் தலைவர் ஓசாமா பின்லேடன் தற்போது உயிருடன் இருப்பதாகவும் தன்னுடன் மிகக்குறைந்த எண்ணிக்கையில் சிலரை வைத்துக் கொண்டு இங்குமங்கும் தப்பிக் கொண்டிருக்கிறார் என்று பாகிஸ்தான் கூறியுள்ளது.




இது குறித்து பாக். வெளியுறவு அமைச்சர் குர்ஷித் கசூரி நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது;

ஒசாமா பில்லேடன் ஓரிடத்தில் இருந்து வேறொரு இடத்திற்கு அடிக்கடி மாறிக்கொண்டிருக்கிறார். அவருடைய நெருங்கிய வட்டாரம் குறைந்து விட்டது. ஒரு சிலருடன் மட்டுமே அவர் தங்கியிருக்கிறார்.ஓரிடத்தில் நிலையாகத் தங்கவில்லை. ஒரே இடத்தில் தங்கினால் அவரை எளிதாகக் கண்டு பிடித்து விட முடியும் அடிக்கடி இடம் மாற்றுவதால் இதுவரை அவரைக் கண்டு பிடிக்கமுடியவில்லை.

எனினும் அல்ஹைறதாத் தீவிரவாதிகளின் தொடர்பை பாகிஸ்தான் முடக்கியுள்ளது. அந்த அமைப்புடன் தொடர்புடையவர்கள் அவ்வப்போது கைது செய்யப்படுகின்றனர். அவர்களுடைய வங்கிக் கணக்குகள் முடக்கப்படுகின்றன இவ்வாறு குர்ஷித் கூறினார்.

# பலியானவர்களைத் தேடும்பணியை தாய்லாந்து அரசு மீண்டும் முடுக்கிவிட்டுள்ளது

(பாங்கொக்)

சுனாமி தாக்குதல் நடந்து ஐந்து மாதங்களாகும் நிலையில், பேரலைகளில் சிக்கி பலியானவர்களின் உடல்களைத் தேடும் பணியை, தாய்லாந்து மீண்டும் முடுக்கிவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி இந்தோனேஷியாவில், பூகம்பம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமிப் பேரலைகளால், தாய்லாந்து, இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகள் பாதிக்கப்பட்டன. தாய்லாந்தில் பலர் அலைகளில் அடித்துச் செல்லப் பட்டனர். பலருடைய உடல்கள் கூட கிடைக்கவில்லை. வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் ஏராளமானோர் தாய்லாந்தில் காணாமல் போயினர். கடந்த மாதம் உடல்களைத் தேடும் பணி நிறுத்தப்பட்டது.ஆனால், மூன்றாயிரம் பேரைக்காணவில்லை என்று தெரிய வந்தது. இந்நிலையில். பலியானவர்களின் உடல்களையாவது மீட்டுத் தாருங்கள் என்று பல நாடுகளிலுள்ள அவர்களின் உறவினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இதையடுத்து தாய்லாந்தில் சுனாமியால் இறந்தவர்களின் உடல்களைக் கடற்கரை ஓரங்களில் தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை வெளிநாட்டுப் பெண் ஒருவரின் சிதைந்த உடல் கண்டு பிடிக்கப்பட்டது.சுனாமியால் தாய்லாந்தில் உள்ள பாங்நெகா மாகாணக் கடற்கரையில் உள்ள உல்லாச ஓட்டல் முற்றிலும் சிதைந்து விட்டது. அதன் இடிபாடுகளில் இருந்து பெண் உடல் மீட்கப்பட்டது. சுனாமி தாக்குதலால் தாய்லாந்தில் மட்டும் ஐயாயிரத்து 395 பேர் பலியானதாக அரசு தகவல் வெளியிட்டது. அதில் பாங்நெகா கடற்கரையில் மட்டும் நான்காயிரத்திற்கும் மேற்பட்டோரின் உடல்கள் மீட்கப்பட்டன.

காணாமல் போனவர்கள் மொத்தம் 2, 822 என்று கணக்கிடப் பட்டுள்ளது.



குரலை அடையாளம் காணக் கூடிய ரோபோவை ஜப்பானைச் சேர்ந்த ரோஷிபா நிறுவனம் தயாரித்துள்ளது. அப்ரி ஆல்பாவி மூன்று என்று பெயரிடப்பட்டுள்ள அந்த ரோபோவிடம் பேசுகிறார் டோக்கியோவைச் சேர்ந்த மொடல் அழகி.

### –வடமாகாண அதிபர்கள் சங்கம் நடத்திய–

# க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான

# ஐந்து நாள் துரித மீட்டல் செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

**வடமாகாண அதிபர்கள் சங்கம் நடாத்திய துரிதமீட்டல் செயலமர்வு ஒன்று கிளிநொச்சி மத்தியகல்லூரியில் நடைபெற்றுள்ளது.**

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை, யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பு, யாழ்மத்திய கல்லூரி லியோ கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெற்ற இவ்வருடம் க.பொ.த உயர்தரப்பரீட்சைக்குத் தோற்ற வுள்ள மாணவர்களுக்கான மேற்படி துரித மீட்டல் செயலமர்வு கிளிநொச்சி மத்தியகல்லூரியில் ஐந்து நாட்களாக நடைபெற்றுள்ளது.

இந்த மீட்டல் வகுப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இவ்வருடம் கணித, விஞ்ஞான பாடங்களில் பரீட்சை எழுதும் மாணவர்கள் பலர் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதிவரை நடைபெற்ற செயலமர்வில் விரிவுரையாளர்களாக எஸ்.ஸ்ரீரேம்நாத் மெதடிஸ்த கல்லூரி கொள்ளுப்பிட்டி, எ.குணசிங்கம், திருக்குடும்பக் கன்னியர் மடம் பம்பலப்பிட்டி, எஸ்.தில்லைநாதன் இந்து மகளிர்கல்லூரி கொழும்பு, வி.இராஜதேவா முஸ்லிம் மத்தியகல்லூரி, எஸ்.கணேசன் தொழில்நுட்பக் கல்லூரி மட்டக்களப்பு,எஸ்.பி.குணசீலன் புனித தோமேயா கல்லூரி கல்கிசை, வி.குகாதரன புனிததோமேயர் கல்லூரி கல்கிசை, ஆர்.ஈஸ்வரதாஸன் இந்துக் கல்லூரி கொழும்பு ஆகிய விரிவுரையாளர்கள் செயலமர்வினை நடத்தினார்கள்.

மேற்படி செயலமர்வு முடிவுநாளாகிய கடந்த வியாழனன்று செயலமர்வினை நடத்திய ஆசிரியர்களைப் பாராட்டும் முகமாக மீட்டல் வகுப்பை நிறைவு செய்துவைக்கும் நிகழ்வொன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இது அன்று நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்றது. இதில் கிளி.வலயக்கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா, கல்விக்கழகப்பொறுபபாளர் வெ.இளங்குமரன், கல்விமேம்பாட்டு பேரவைத்தலைவர் பிரான்சிஸ் ஜோசெப் அடிகளார் ஆகியோர் ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துரை கூறினார்கள். மாணவர்கள் சார்பிலும் ஒரு மாணவன் ஆசிரியர்களைப் பாராட்டினார்.

இந்த வடமாகாண அதிபர் சங்கம் நடத்தும் துரித மீட்டல் செயலமர்வு யாழ்.மத்தியகல்லூரி, நெல்லியடி மத்தியகல்லூரி, கிளிநொச்சி மத்தியகல்லூரி என்பவற்றில் நடத்தப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு)



(படம், குகன்)

### -தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு-

## முல்லை. மாவட்ட மாணவர் அமைப்பு விளையாட்டுப் போட்டிக்கு ஏற்பாடு

(புதுக்குடியிருப்பு)

எதிர் வரும் இரண்டாம் திகதி அன்று இடம் பெறவுள்ள தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு முல்லை மாவட்ட மாணவர் அமைப்பினர் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

மரதன் ஓட்டம், துவிச்சக்கரவண்டி ஓட்டம் ஆகிய போட்டிகள் இடம் பெறவுள்ளதால் கலந்து கொள்ள விரும்பும் பாடசாலை மாணவர்கள் புதுக்குடியிருப்பிலுள்ள முல்லை மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லை மாவட்ட மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர்.

பதிவுகளை மேற்கொள்ளச் செல்லும் மாணவர்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தும் சான்றுடன் செல்லுமாறும் மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர். அத்துடன் எதிர் வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (08)

## ஆஸ்மா நோய் சம்பந்தமாக கிளிநொச்சியில் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

ஆஸ்மா நோய் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

ஆஸ்மா நோய் சம்பந்தமான சந்தேகங்களிற்கு விளக்கமளிக்கும் முகமாக எதிர்வரும் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஆஸ்மா நோயினால் அவஸ்த்தைப்படுபவர்களும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் மற்றும் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட வைத்திய அதிகாரி சதானந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். (கு)

## இராணுவ ட்ரக் சாரதிக்கு 2 வருட கடூழியச் சிறை

### -திருமலை நீதவான் தீர்ப்பு

(திருகோணமலை)

கவனயீனமாக வாகனத்தைச் செலுத்தி இருவருக்கு மரணத்தை ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் விசாரணை முடிவில் குற்றவாளியாகக் காணப்பட்ட இராணுவ ட்ரக் சாரதி வேலலபடபெதிகே சோமபால என்பவருக்கு திருகோணமலை நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான எம்.கணேசராஜா இரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். கடந்த புதன்கிழமை இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

கவனயீனமாக வாகனத்தைச் செலுத்தி இராசையா ஸ்ரீரஞ்சன், சண்முகம் உதயகுமார் ஆகியோருக்கு மரணத்தை உண்டு பண்ணியதாக எதிரி மீது தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 298 இன் கீழ் திருகோணமலைப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இச்சம்பவம் 20.10 .1998 இல் திருகோணமலை ...ன்துறைமுகாம் வீதியில் இடம் பெற்றது. (25)

## பரந்தன் பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

பரந்தன் பிரதேசத்தில் கிராம ரீதியாக சமகால அரசியல் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. கடந்த வியாழக்கிழமை பரந்தன் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பிரதேச தே.எ.பேரவை துணைச்சங்கச் செயலாளர் சிறீஸ்கந்தராசா தலைமையில் பி.ப 4.00 மணிக்கு நடைபெற்றது.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பாக கிளி.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா, கண்டாவளைக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ச.வின்சன், பரந்தன் கிராமசேவகர் சி.கனகராசா ஆகியோர் கருத்துரை வழங்கினர். இந்நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு கருத்துரைகளை ஆர்வத்துடன் செவிமடுத்தனர். (14)

## கிராமிய அபிவிருத்தி வங்கி ஏப்ரலில் 187 பேருக்கு உதவி

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கி இவ்வருடம் ஏப்பிரல் மாதத்தில் 187 பயனாளிகளிற்கு 73,13,403 ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் விவசாயக் கடனாக 31 பயனாளிகளிற்கு 3,75 ,000 ரூபாவும், சுயதொழில் கடனாக 102 பயனாளிகளிற்கு 39,57,500 ரூபாவும், தொழில்துறை மேம்பாட்டுக் கடனாக ஒன்பது பயனாளிகளிற்கு 11,36,500 ரூபாவும், சூரியமின் ஒளிக் கலத்தொகுதிக் கடனாக 30 பயனாளிகளிற்கு 12,24,103 ரூபாவும், ஏனைய கடனாக 15 பயனாளிகளிற்கு 6,20, 300 ரூபாவும் கடனாக வழங்கப்பட்டுள்ளதாக கிராமிய அபிவிருத்தி வங்கி பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (15)

## பிரமந்தனாறு ம.வி மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை

கிளி. பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரி.பாஸ்கரன் தலைமையில் சுகாதாரப் பரிசோதகர், பொது சுகாதார மருத்துவமாது மற்றும் கிராமிய தரிசிப்பாளர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஒன்றிணைந்து மருத்துவ பரிசோதனை நடத்தியதோடு சிகிச்சைகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. தரம் 1,4,7 ஆகிய மூன்று வகுப்புக்களைச் சேர்ந்த 113 மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் கண், காது, பல் போன்ற பிரச்சினைகள் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் மேலதிக சிகிச்சை மேற் கொள்ளவேண்டிய மாணவர்களுக்கு கிளி.வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற சிபார்சுக் கடிதங்கள் வழங்கப்பட்டன. (14)

## வீதியில் கிடந்த ஓயிலில் சறுக்கி பல உந்துருளிகள் விபத்தில்

(அலுவலக செய்தியாளர்)

வாகனம் ஒன்றிலிருந்து வீதியில் சிந்திய ஒயிலினால் ஒன்றன் பின் ஒன்றாக பல உந்துருளிகள் சறுக்கி விழுந்தன.

நேற்று முன்தினம் இரவு ஏ-9 வீதியில், கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக வாகனம் ஒன்றிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரம் வரை வீதியில் ஒயில் சிந்தியுள்ளது.

மேற்படி சம்பவம் இரவு வேளை என்றபடியால் சாரதிகள் வீதியில் சிந்திய ஒயிலை அவதானிக்க முடியவில்லை எனவே அடுத்து அடுத்து வந்த உந்துருளிகள் ஒன்றன் பின் ஒன்றாக சறுக்கி விழுந்துள்ளன.

இச்சம்பவத்தின் போது சில நிமிடங்கள் போக்குவரத்துத் தாமதமானது. உடன் அவ்விடத்திற்கு விரைந்த காவல்துறையினரின் வீதி ஒழுங்குபடுத்தலின் பின் போக்குவரத்துச் சீர்செய்யப்பட்டது.

இச்சம்பவத்தின்போது இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி சம்பவத்தில் நான்கு உந்துருளிகள் சறுக்கி விழுந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (தீ)

### தலைமன்னார்ப் பகுதியில் வலம்புரிச்சங்கு கண்டெடுப்பு

தலைமன்னார் பகுதியில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வலம்புரிச்சங்கொன்று நேற்றுமுன்தினம்காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இச்சங்கு வித்தியாசமான முறையில் பச்சை, வெள்ளை, சிவப்பு நிறத்தைக்கொண்ட வரி கள் காணப்படுவதாகவும் இச்சங்கை வாங்குவதில் தென்பகுதி வியாபாரிகள் அதிகமானோர் தலைமன்னார் நோக்கி விரைந்து செல்வதாகவும் தெரியவருகின்றது. (18)

### திருஞானசம்பந்தர் குருபூசை

(அலுவலக செய்தியாளர்)

இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் திருநெறிக்கழகத்தினரால் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளின் குருபூசை கிளிநொச்சி இராமநாதபுரம் மாவடி சிறிமாரிஅம்மன் கோவிலில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதியன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்படி குருபூசை இடம் பெறவுள்ளதால் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் திருநெறிக்கழகத்தலைவர் வே.மகாலிங்கம் வேண்டியுள்ளார். (சோ)

## கிராம தரிசிப்பும் சமகால கருத்தரங்கும்

(ஒட்டுசுட்டான்)

முல்லை.மாவட்ட அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் முல்லை. மாவட்டங்களிலுள்ள கிராமங்களுக்குச் சென்று கிராம தரிசிப்பு நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் 7.00 மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள சின்னச்சாலம்பன் கிராமத்தில் ஆரம்பமான நிகழ்வில் தேசியக் கொடியினை ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் சசி ஏற்றியதைத் தொடர்ந்து போராளிகளினால் அன்பழகன் முன்பள்ளி ஏனைய சிறுவீதிகள் சிரமதாணப்பணிகள் மூலம் சீர் செய்யப்பட்ட பின்னர் போராளிகள் சகல வீடுகளுக்கும் சென்று அப்பகுதியில் உள்ள மக்களைச் சந்தித்ததோடு மக்களின் குறைகளைக் கேட்டு அறிந்து கொண்டனர்.

பின் மாலை 4.00 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இக்கிராம தரிசிப்பில் முல்லை. மாவட்ட சகலபிரிவுகளையும் சேர்ந்த போராளிகளும் கலந்து சிறப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

### கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரிலிருந்து மோகனசுந்தரம் யோகேஸ்வரி செங்கராத்தி மோட்டை மரையடித்த குளம் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல 615413666V) மற்றும் பயண அனுமதியட்டை, பூநகரி- திக்குவிலுக்குமிடையில் வீதியிலிருந்து செல்லையா சந்திரகாந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல 582803510V,) பயணஅனுமதியட்டை ஆகியவை அடங்கிய கைப்பை (Bag) கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்டைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர். (சோ)

# திருமலையில் ஏற்பட்டுள்ள பதற்ற சூழலை தணிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

**திருகோணமலையில் ஏற்பட்டிருக்கின்ற பதற்ற சூழலைத்தணித்து அங்கு இயல்பு நிலையை உருவாக்க சிறிலங்கா அரசு உடனடியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

திருகோணமலையானது தமிழர்களின் பூர்வீகமான மண். தமிழர்கள் தனித்துவமான நிலையில் வாழ்ந்து வரும் நிலம். இதனைத் திட்டமிட்ட வகையில் தமிழர்களின் தனித்துவத்தினை இழக்க வைக்க வேண்டுமெனவும் அந்த பூர்வீகமான தமிழரின் தாயகத்தினை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மூலம் சிங்களத்தினுடைய சின்னமான பௌத்த மதத்தினை பரப்புவதன் மூலமாகவும் சிங்களவர் தம்வசப்படுத்திக் கொள்ள முடியும் என்ற நோக்கோடு சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு செயற்பாடாகவே திருகோணமலை நகரப் பகுதியில் புத்தர்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு ஆக்கிரமிப்பின் வடிவில்தான் தமிழர்களுடைய மண்ணை ஆக்கிரமிக்க திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை காலத்துக்குக் காலம் ஆட்சிபீடமேறிய சிங்களப் பேரினவாத அரசாங்கம் மேற்கொண்டு வந்தது. எனவே திருகோணமலையில் புத்தர்சிலை வைத்ததும் ஆக்கிரமிப்பின் தொடர்ச்சிதான் எனவே உடனடியாகப் புத்தர் சிலையை அகற்றி சிங்கள காடையர்களின் வெறியாட்டத்தினை நிறுத்தி திருகோணமலை மக்களின் வாழ்வில் ஒ'ழமையான நிலையை உருவாக்க உரிய நடவடிக்கையை சிறிலங்கா அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

காடைத்தனங்களையும், மத ரீதியான ஆக்கிரமிப்பு படிவங்களையும் தமிழர்களாகிய நாம் இனியும் அனுமதிக்கப்போவதில்லை. எனவே திருகோணமலையில் இயல்பு நிலை ஏற்படுத்தப்படாது விட்டால் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு அரசிற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியநிலை உருவாகுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிராம சேவையாளர் பற்றாக்குறையால் சுனாமி நிவாரணப் பணிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நிலவும் கிராம சேவையாளர்களுக்கான பற்றாக்குறைகள் காரணமாக சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டில் சுனாமியால்பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கிலானோர் வடமராட்சியில் வாழ்ந்துவருகின்றனர். இவர்களுக்கான நிவாரண உதவிகள் அவ்வப்போது பல்வேறு அமைப்புக்களாலும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 35 கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான கிராம சேவகர்கள் இன்னமும் நியமிக்கப்படாது அப்பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாகவே உள்ளது.

இந்நிலையில் சுனாமி அனர்த்த நிவாரண பகிர்வில் கிராம சேவகர்களது பங்களிப்பு மிக அவசியமாகக் காணப்படுவதனால் கிராம சேவகர்கள் நியமிக்கப்படாத கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனினும் வெற்றிடமாகவுள்ள பிரிவுகளுக்கு அயற்கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த கிராம சேவகர் தற்காலிகமாக சேவையாற்றினும் அதில் பெரும் நெருக்கடியுள்ளதாக கிராம சேவகர்கள் செ'ரிவிக்கின்றனர். (33)

# சுனாமியால்பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பால்மா பைக்கற்றுகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 5454 குடும்பங்களுக்கு நியூசிலாந்தைச் சேர்ந்த அங்கர் பால்மாநிறுவனம் இலவசமாக பால்மா பைக்கற்றுக்களை வழங்கியுள்ளது.

கடந்த வியாழன் யாழ். வடமராட்சி பருத்தித்துறையில் சுனாமியால் பாதிக்கப்பட்டமக்கள் வாழும் பகுதிக்குச் சென்ற அங்கர் பால்மா நிறுவன அதிகாரிகள் மற்றும் முகவர்கள் குழுவினர் 27 லட்சம் ரூபா பெறுமதியான பால்மாப்பைக்கற்றுகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக வழங்கினர்.

இதில் சுனாமியால் பாதிக்கப்பட்டஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா மூன்று பைக்கற்றுகள் வீதம் 5454 குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டன. (33)

# சமூக கற்றல் வளநிலையம்

(அலுவலக செய்தியாளர்)

உடனடித்தொழில் வாய்ப்பினைக் கருத்தில் கொண்டு சமூகக்கற்றல் வளநிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சமூகக்கற்றல் வளநிலையம், மூலமாக யாழ் இந்துக் கல்லூரியிலும், யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் இளைஞர் யுவதிகளுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென வலயக்கல்விப்பணிப்பாளர்அறிவித்துள்ளார்.(சு)

# வடமராட்சியில் தமிழீழ சுகாதார சேவையினரால் பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் கண்டுபிடிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வடமராட்சியில் சுகாதார சேவையினரால் பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் கண்டுபிடிக் கப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், தமிழீழ சுகாதாரசேவைகள் யாழ். இணைப்பாளர் செ. குணாளன் மற்றும் உணவு மருந்தாய்வாளர், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் கொண்ட குழுவினரால் திடீர்சுகாதாரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வின் போது சில உணவகங்கள், தேநீரகங்கள், குளிர்பான நிலையங்கள் ஆகியவை அடிப்படை சுகாதார வசதியின்றிமிகவும் மோசமான சுகாதார சீர்கேட்டுடன் இருந்ததையடுத்து இந்நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி ஆய்வுகளின் போது சுமார் ரூபா ஒருலட்சத்திற்கும் அதிகமான பெறுமதியுடைய பாவனைக்குதவாத காலாவதியான பழுதடைந்த உணவுப்பொருட்கள் உலருணவுப் பொருட்கள். மருந்து வகைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றிற்கும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக தமிழீழ சுகாதார சேவைகள் யாழ். மாவட்ட இணைப்பாளர் செ.குணாளன் தெரிவித்துள்ளார். (சு)

# யாழ்ப்பாண கல்வி வலய தமிழ் மொழித்தினப்போட்டி

(அலுவலக செய்தியாளர்)

யாழ்ப்பாணகல்விவலயத்தினரால் தமிழ் மொழித்தினப் போட்டி நடைபெறவுள்ளது. நாளை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள தமிழ் மொழித்தினப் போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவமும், தமிழ் மொழித்தின விழாவும் மாலை 2.00 மணிக்கு யாழ்வேம்படிமகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக்கல்விப பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (சு)

# அவசர கலந்துரையாடல்

வட கிழக்கில் கடமையாற்றும் நீர் உயிர்வள ஆசிரியர்கள் அனைவரையும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் கல்வி வலயத்திலுள்ள கல்வி மேம்பாட்டு பேரவையில் ஒன்று கூடுமாறு நீர் உயிர்வள ஆசிரியர் சங்கத்தலைவர் கேட்டுள்ளார்.

# சுனாமி நிவாரணப் பொருட்கள் படையினரின் கடும் சோதனையால் சேதம்

### உதவும் அமைப்புகள் விசனம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ் வடமராட்சிபகுதி மக்களுக்காக எடுத்துவரப்படும் நிவாரணப் பொருட்களை சிறிலங்கா படையினர் கடும் சோதனைகளுக்குட்படுத்துவதாக உதவும் அமைப்புகள் சிலவற்றால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமி நிவாரணத்திற்காக யாழ். மாவட்டத்துக்குள் எடுத்துவரும் பொருட்கள் முகமாலைப்பகுதியில் வைத்து சோதனை செய்யப்படுகின்றன. இச்சோதனைகளை முடித்துக் கொண்டு கொடிகாமம்-பருத்தித்துறை வீதியூடாக நிவாரணப் பொருட்களை ஏற்றிவரும் பாரஊர்திகளை முள்ளியான் இராணுவமுகாமை அண்டிய பகுதியில் வைத்து வழிமறித்து தீவிரசோதனைகளுக்கு உட்படுத்துகின்றனர்.

படையினரது இச் சோதனைக் கெடுபிடிகளால் நிவாரணத்துக்காக எடுத்து வரப்படும் உணவுப்பொருட்கள் சேதமாக்கப்பட்டு, விரயப்படுத்தப்பட்டு வருகின்றன ஏனைய தளபாடங்கள் உபகரணங்கள், பாத்திரங்கள் என்பனவும் சேதமாகிப்போகின்றன.படையினரது மனிதாபிமானம் அற்ற இச் செயற்பாடுகள் குறித்து உதவும் தொண்டர் அமைப்புகள் விசனம் தெரிவித்துள்ளன. (33)

# மிதிவெடிகள் அகற்றப்பட்ட பகுதிகளில் பயிர்ச்செய்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் கோப்பாய் மற்றும் சிறுப்பிட்டி பகுதிகளிலுள்ள மிதிவெடிகள் அகற்றப்பட்ட விவசாய நிலங்களில் அப்பகுதி விவசாயிகள் மீண்டும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படிபகுதிகளில் உள்ள பலஏக்கர் காணிகளுள் சிறிலங்கா படையினரால் மிதிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்ததால் அப்பகுதி விவசாயிகள் பலரும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலைமைகளை கவனத்தில் கொண்டு "ஹலோட் ரெஸ்ட்" அமைப்பினரால் அப்பகுதியிலிருந்த மிதிவெடிகள் அகற்றப்பட்டு அண்மையில் பொது மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து அந்நிலங்களில் உழுது பயிரிடும் நடவடிக்கைகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். (33)

### —யாழ். வடமராட்சிப்பகுதியில்—

# சுனாமி உயிரிழப்பீட்டு கொடுப்பனவு கூட 325 குடும்பங்களுக்கு கிடைக்கவில்லை

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தோருக்காக அரசினால் வழங்கப்பட்ட இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் கூட இன்னமும் யாழ்.வடமராட்சி மக்களுக்கு முழுமையாகக்கிடைக்கவில்லை எனத் தெரியவருகிறது.

அந்த வகையில் சுனாமி அனர்த்தம் காரணமாக யாழ் வடமராட்சியில் 2514 பேர் உயிரிழந்துள்ளனர். இவ் இழப்புகளால் பாதிக்கப்பட்ட 325 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இன்னமும் உயிர்இழப்பீட்டுக் கொடுப்பன வுகள் வழங்கப்படவில்லை.

இதனால் இக்குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் இவர்களுக்கான கொடுப்பனவுகளை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி கடற்றொழிலாளர்கள் சங்கத்தினர் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

### யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில்

# பொது நீர் கம்பங்கள் மூலம் குடிநீர் பெறுவோரிடம் கட்டணம் பெறுவதற்கு நடவடிக்கை

யாழ். பொது நீர் கம்பங்களிலிருந்து குடி நீர் பெறும் குடும்பங்களிடம் கட்டணம் பெறுவதற்கு யாழ். மாநகர சபை முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் தகவல் வெளியிட்டுள்ளார். இதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

" யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட கரையோரக் குடியிருப்புக்கள் அனைத்திற்கும் யாழ் மாநகர சபை பொது நீர்க்கம்பங்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. அவற்றைவிட தனியார் வீடுகளுக்கும், நீர்மானி பொருத்தப்பட்டு கட்டணத்திற்கு குடி நீர் வழங்கப்பட்டு வருகின்றது. நகர மக்களின் தேவை கருதி பாரிய இக்குடிநீர்த் திட்டங்கள் பொது மக்களால் சரி வர பராமரிக்கப்பட்டும் பாவிக்கப்பட்டும் வருவதில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

சராசரி நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 10 லீற்றர் முதல் 15 லீற்றர் வரையிலான குடி நீர் வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு குடி நீர் வழங்கப்படும் நீர்க் கம்பங்களை சுத்தமாகவும், சேதப்படுத்தாமலும், உதிரிப்பாகங்களைத் திருடாமலும் பாதுகாப்பது அந்தக் குடிநீர்க் கம்பத்தில் நீரைப் பெறுகின்ற குடும்பங்களின் பொறுப்பாகும். சராசரியாக ஒரு குடிநீர் கம்பத்தில் 15 முதல் 20 வரையிலான குடும்பங்கள் குடிநீரைப் பெற்றுவருகின்றன.

இந்தத் திட்டங்களைப் பாரிய பணச் செலவில் மாநகர சபை மக்களின் குடியிருப்புக்களுக்கு அருகில் கொண்டு சென்று குடிநீரை வழங்கி வருகின்றது. மாநகர சபையின் நிலைமையைக் கவனத்திற் கொண்டு இச் செயற்பாடுகளுக்கு ஏற்படும் செலவில் ஒரு பகுதியை மக்களிடம் இருந்து அறவிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

பொது நீர்க் கம்பங்களிலிருந்து குடிநீர் பெறுகின்ற குடும்பத்தினர் நாள் ஒன்றுக்கு ரூபா ஒன்று வீதம் மாதாந்தம் 30 ரூபா செலுத்த வேண்டும். அதற்காக இந்தப் பொது நீர்க் கம்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பாவனையாளர் சங்கம் அமைக்கப்படவிருக்கின்றது. குறிப்பிட்ட பொது நீர்க்குழாய் சூழலிலுள்ள சகல பாவனையாளர்களுக்கும் இதில் அங்கத்தவர்களாக சேர்க்கப்படுவார்கள். அதற்கென ஒரு தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரும் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் மாதாந்தம் கட்டணத்தை அறவிட்டு மாநகர சபைக்கு வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்படவுள்ளது. இத திட்டத்திற்கு குழாய் நீரைப் பாவிக்கின்ற பொது மக்கள் அனைவரும் பூரண ஆதரவு தரவேண்டுமென மாநகர சபைகேட்டுக்கொள்கின்றது.

உலகம் முழுவதும் இன்று தொழில்நுட்பம் மிக மிக வேகமான வளர்ச்சியை கண்டிருக்கின்றது. இன்னும் வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது அதே நேரத்தில் தொழில் நுட்பரீதியாக பல நவீன கருவிகளைக் கண்டுபிடித்து புதிய கண்டுபிடிப்பு களை இந்த நவீன கருவிகள் மூலம் மனிதன் கண்டுபிடிக்கின்ற அந்த வளர்ச்சி இன்று வேக மாக உலக நாடுகளிடையே வளர்ச்சி பெற்று வருகிறது.


வன்னிதொழில்நுட்பவியல் நிறுவன முதல்வர் த.சாந்தராகவன்

அவர்கள் இப்போது தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அதற்கு பின்னர் இரண்டாவது தொகுதி மாணவர்களை நாங்கள் உள்வாங்கி அவர்களுக்கு ஒரு வருட முழுமையான கற்கை நெறியை நாம் வழங்கியுள்ளோம்.

இந்த ஒருவருட முழு நேரக் கற்கை நெறிக்குள் முக்கியமான ஒரு விடயம் என்னவென்றால் நாங்கள் இங்கு வழங்குகின்ற பாட நெறிகள் முழுவதும் ஒரு வருடகால கற்கை நெறியாக இருந்தாலும் இவை ஒரு பல்கலைக்கழகங்களில் இருக்கின்ற இந்த துறைசார்ந்த எந்த ஒரு பாடங்களுக்கும் சமவலுவுள்ள பாட நெறியாக இருக்கும்.

நிறைய விடயங்களை குறுகிய காலங்களில் நாங்கள் படிப்பிக் கின்றோம்.அதே நேரத்தில் அவர் களுக்கு அந்தப் பாடங்களுக்குரிய செயல்முறை பயிற்சிகள் அதாவது புத்தகங்களில் எதைப் படிக்கின்றார் களோ அதை செயல்முறையாக பரிசோதனைக் கூடங்களில் செய்து பார்க்கின்ற செயல்வடிவம் பெறவேண்டும். அது தான் அந்தப் பாட நெறியின் முடிவாகவிருக்கும்.

இவ்வாறு செய்த திட்டங்களில் இந்தமுறை மாணவர்கள் செய்த திட்டங்கள் பதினாறு இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டன. இதைத் தவிர வன்னி ரெக் நிறுவனத்தில் வடக்குக் கிழக்கில் இருக்கின்ற எந்த ஒரு தொழில் நுட்ப நிறுவ னத்தையும் விட சிறந்த வசதிகள் இங்கு இருக் கின்றது. இந்த வசதிகளையும் இந்தத் திட்டங் களால் வந்த தயாரிப்புக்களையும் நாங்கள் பொது மக்களுக்கு காண்பிப்பதன் மூலம் அது பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என்று கணினி மயப்படுத்தல் அல்லது இலத்திரனியல் மயப் படுத்துதலால் வருகின்ற பிரயோசனங்களை வைத்து எப்படி எங்களுடைய வாழ்க்கையில் இலகுவாகத் தீர்க்கலாம் என்பதை மக்கள் அறிந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாக இருப்பதுடன் எமது இந்தக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கும் தாங்கள் செய்த அந்தத் திட்டங்களை மக்களுக்கு அறிமுகப் படுத்தியதன் மூலம் தங்களாலும் அதை உறுதியாகச் செய்து முடித்து விடமுடியும் என்பதை நிரூபிப்பதற்கும் இந்தக் கண்காட்சி ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.

கின்ற கணினி உலகத்திலேயே மிகவும் இறுதி யாக வந்த கைக் கணினி என்று சொல்லப் படுகின்ற அந்த கணினியை பாவித்து எவ்வாறு பல்வேறு வேலைத்திட்டங்களை இலகுவாக் கலாம் என்பதை இந்த கைக்கணினி செய்யும் இது ஒரு புதுவிடயம் தான்.

மேலும் மாணவர்களுடைய புதிய வடி வமைப்புக்களைப்பார்த்தால் சூரிய மின்கலம் ஒன்று சூரியன் வருகின்ற திசைக்கு ஏற்ப தன்னை திருப்பிக் கூடுதலான வெப்பத்தை உறிஞ்சி அதிகளவான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு வடிவமைப்பாக இந்தச் சூரிய மின்கலம் அமைந்துள்ளது.

அது போல் தான் ஒரு நூலகத்தில் புத்த கங்களை பரிமாற்றம் செய்யும் போது நாங்கள் அட்டைகளை நிரப்பி அதன் மூலம் பதிவு செய்து தான் பரிமாறுகின்றோம். ஆனால் அவற்றை இலகுவாகச் செய்வதற்காக ஒரு சிறிய கருவி களையும் கண்டு பிடித்துள்ளனர். இது (RFID) என்று அழைக்கப்படுகிறது.

அத்துடன் ஒரு கதவு எவ்வாறு தானாகத் திறந்து மூடிக் கொள்ளும் என்பதையும் அறி முகம் செய்து வைத்திருக்கிறார்கள். ஒருவர்

# வடக்கு கிழக்கில் தொழில்நுட்ப வளர்ச்சியும் வன்னிரெக் நிறுவனமும்

இவ்வாறு உலக நாடுகள் கண்டுபிடித்த இந்த நவீனகருவிகளையும் இலத்திரனியல் தொழில்நுட்ப உபகரணங்களையும் கையாண்டு எமது தாயகப் பகுதியில் நாங்களும் தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சியடைந்தவர்கள் என்பதை உலகிற்கு காட்ட இன்று வன்னி தொழில் நுட்ப வியல் நிறுவனம் பலபுதிய விடயங்களை அறி முகம் செய்ய தொழில் நுட்ப ரீதியாக முயற்சித்து வருகின்றது.

உண்மையில் வன்னியைப் பொறுத்தமட்டில் எத்தனையோ ஆண்டுகள் பின்தங்கிய நிலையில் தான் காணப்படுகின்றது. அவ்வாறு காணப்பட்டாலும் இப்பகுதியில் தொழில்நுட்பரீதியான கல்விகளை மாணவர் களுக்கு புகட்டி அதனூடாக எமது பகுதிகளும் ஏனைய பகுதிகளுடன் சமமாக நிற்கக் கூடிய வளர்ச்சியை பெற்று கொடுக்கவேண்டும். என்ற அந்த உயர்ந்த எண்ணத்துடன் கிளிநொச்சியில் வன்னித் தொழில்நுட்பவியல் என்ற நிறுவனம் ஒன்றை நிறுவி அதனூடாக தொழில்நுட்பப் பாடங்களை மாணவர்களுக்குப் புகட்டி வரு கின்றது.

இவ்வாறு தொழில் நுட்ப ரீதியான பாடங் களைக் கற்பித்து அதிலிருந்து வெளியேறும் மாணவர்களைக் கொண்டு புதிய கருவிகளையும் ஏற் கனவே கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளை நவீன கருவிகளாக மாற்றுகின்ற செயற்பாட்டையும் வன்னிரெக் நிறுவனம் செய்து வருகின்றது.

அந்த வகையில் வன்னிரெக் நிறுவனம் தான் கற்பிக்கும் மாணவர்களைப் பூரணமான ஒரு அறிவுடன் வெளியேற்றுகின்ற போது அவர்

த.குகன்

களைக் கொண்டு வருடாவருடம் இலத்திரனியல் கண் காட்சியை நடாத்தி வருகின்றது. அவ்வாறு இவ் வருடம் வெளியேறும் மாணவர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்ட இலத்திரனியல் தொழில்நுட்பம் வாய்ந்த கண்காட்சி கடந்த சில நாட்களாக வன்னிரெக் நிறுவனத்தில் நடைபெற்று வந்தது.

இந்தக் கண்காட்சியின் நோக்கங்கள் மற்றும் இவற்றில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உப கரணங்கள் ஏதாவது கண்காட்சியில் பயன்படுத் தினீர்களா, அவற்றை எவ்வாறு எமது பகுதியில் கண்டுபிடிக்க வாய்ப்பாக இருந்தது, தொழில்நுட்ப சாதனங்கள் எவ்வாறு கிடைக்கப் பெற்றது. போன்ற விடயங்களை வன்னி தொழில் நுட்ப வியல் நிறுவன முதல்வர் சாந்தராகவனிடம் கேட்ட போது அவர் அதற்குரிய விளக்கங்களைத் தந்தார் அவற்றை இங்கு தருகின்றோம்.

இந்த வன்னி தொழில் நுட்பவியல் நிறு வனத்தை கிளிநொச்சியில் நிறுவி இன்று இரண் டாவது ஆண்டு நிறைவை அடைந்து கொண்டி ருக்கின்றோம் இந்த சந்தர்ப்பத்தில் எமது முதலா வது தொகுதி மாணவர்கள் தமது கல்வியை பூர்த்தி செய்து கொண்டு வெளியேறும் போது இதே மாதிரி ஒரு கண்காட்சியையும் செய்து வாய்ப்பு இங்கு அதிகம் வழங்கப்படுகின்றது.

அப்படி செய்கின்ற போது தான் அதே நோக்கத்தில் அவர்களின் இறுதித் தவணையில் நாங்கள் அவர்களுக்கு ஒரு பாட நெறியை கொடுக்கின்றோம். அது என்ன வென்றால் களத்தில் பிரயோகிக்க கூடிய நிகழ்ச்சி என்று கூறலாம். அதனுடைய நோக்கம் என்ன வென்றால் இவர்கள் படித்ததை உண்மை யாகவே களங்களுக்கு சென்று அதாவது எந்த ஒரு நிறுவனமாக இருந்தாலும் சரி, வியாபார



நிலையமாக இருந்தாலும் சரி, வடக்குக் கிழக்கில் இருக்கக் கூடிய எந்த ஒரு தொழில் நுட்பரீதியான தளமாக இருந்தாலும் சரி அங்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை இவர்கள் இங்கு கற்ற தொழில் நுட்ப அறிவைக் கொண்டு அவற்றை இலகுவாக மிக விரைவில் தீர்க்கலாம் அதற்காகத்தான் இந்தக் களத்தில் பிரயோகிக்கக் கூடிய திட்டம் என்ற கற்கைநெறி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் அவர்கள் செய்வது என்ன வென்றால் இங்கு இருக்கின்ற வியாபார நிலையங்களுக்கு கணினி மென்பொருட்கள் செய்கின்றார்கள் அதனால் அவர்களுக்குப் பேப்பரில் செய்யக் சுடிய வேலை எல்லாவற்றை யும் கணினியில் செய்யக்கூடிய மாதிரியுள்ளது. இதனால் ஆளணிப் பற்றாக்குறை என்பது குறைகிறது. நேரம் மிச்சமாகின்றது அத்துடன் இலகுவாக பல கணினிகளை ஒன்றிணைத்து ஒரு வலைப்பின்னலை உருவாக்கி அதில் நிறைய வேலைகளை இலகுவாகச் செய்ய முடிகின்றது.

அதே மாதிரி எங்களுடைய இலத்திரனியல் மாணவர்கள் நிறையச் சந்தர்ப்பங்களை இயந்திர மயமாக மாற்றுகின்றார்கள் உதாரணமாக இந்த இரண்டாம் வருட மாணவர்களுடைய முக்கிய மான ஒரு திட்டம் என்னவென்றால் உளவளத் துறை சம்பந்தமாக நவீன கருவிகளைக் கண்டு பிடிக்கின்ற புதிய திட்டம்.

இப்படியான திட்டங்களை அவர்கள் செய்த பின்னர் அந்தத் திட்டத்தை இந்தக் கற்கை நெறி முடிவடைந்ததும் அதனைக் களத்தில் பிரயோகிக்க வேண்டும். அதாவது அத்திட்டம்

அத்துடன் இம்மாணவர்கள் தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப் பத்தையும் ஏற்படுத்திக்கொடுத்து விடலாம் என்ப தற்காகத்தான் நாம் இந்த வன்னிரெக் நிறு வனத்தின் மூலம் ஒவ்வொரு வருடமும் மாண வர்களை உள்வாங்கி ஒரு வருட முழுநேரக் கற்கை நெறியைப் புகுத்தி அவர் களுக்கு ஒரு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்கின்ற அந்த சந்தர்ப்பம் வரை மாணவர்களை வழி காட்டு கின்ற செயலை கிளி நொச்சியிலுள்ள இந்த வன்னிரெக் நிறுவனம் செய்துவருகின்றது.

மேலும் இந்தக் கண் காட்சி ஒவ்வொரு வருடக் கற்கை நெறி முடிவிலும் புதுவிதமான கண்டுபிடிப் புக்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டு நவீன கருவி களின் வளர்ச்சிப் போக்கை மக்கள் அறிகின்ற சூழலை உருவாக்கிக் கொடுக்கின்ற அந்தத் திட்டத்தையும் வன்னி ரெக் நிறுவனம் செய்யும்.

கடந்த வருடம் "வன்னி விஷன் 04" என்ற பெயரில் செய்தனாங்கள் இவ்வருடம் "வன்னி விஷன் 05" என்ற பெயருடன் இக்கண்காட்சி யை செய்துள்ளோம் இக்கண்காட்சியில் கணினியைக் கொண்டு எப்படி இந்த இலத் திரனியல் சாதனங்களை இலகுவாகக் கையாள லாம். அது பற்றிய மேலதிக தேடல்களை மிக வேகமாகச் செய்யலாம் என்பதற்காகவே தான் கணினிகளை வைத்துக் கொண்டு இலத்திர னியல் சாதனங்களை எவ்வாறு மாற்றி அமைக் கலாம் என்பதற்காகவும் தான் கணினியை கையாண்டிருந்தோம் அதனால் இங்கு கணினி ஒரு காட்சிப் பொருளாக வைக்கப்படவில்லை கணினியைப் பாவித்து எவ்வாறு இலத்திரனியல் வேலைகளை இலகுவாக்கலாம் என்பதற்காகவே வைத்திருந்தோம். இதனை நேரடியாகப் பார்த்தவர்கள் விளங்கிக் கொண்டிருப்பார்கள்.

அடுத்து எமது இலத்திரனியல் மாணவர்கள் செய்த இந்தப் புதிய கருவிகளைப் பார்போமாக விருந்தால் எலற்ரோனிக் டிஸ்பிளே என்ற ஒரு கருவி இது நீங்கள் இந்த திருவிழாக் காலங் களில் பார்த்திருப்பீர்கள் பெரியதொரு உரு ளையை வைத்துக் கொண்டு தான் அந்த மின் குமிழ்களின் வடிவங்களை மாற்றி அமைப்பார்கள். ஆனால் எமது மாணவர்கள் அதனை மாற்றி அமைத்து ஒரு சிறிய கருவியைப் பயன்படுத்தி மிகவும் வேகமாகவும் வித்தியாசமான வடிவங் களையும் கொண்டு மின் குமிழ்களை ஒளிர வைக்கக் கூடிய ஒரு கருவியாகத்தான் இந்த எலற்ரோனிக் டிஸ்பிளே அமைந்துள்ளது.


அடுத்துப் பார்த்தால் இன்று இலங்கை யிலேயே புதிதாக அறிமுகமாகிக் கொண்டிருக்

அலுவலகத்திற்கு வரும் போது கதவு தானாகத் திறந்து பின் தானாக மூடிக் கொள்ளும் என்ற செயற்பாட்டையும் கடந்த வருடம் செய்த கண் காட்சியை போல் அல்லாது முற்றும் புதிதான கருவிகளை அறிமுகம் செய்து காட்டியுள் ளார்கள்.

இவ்வாறு பல புதிய வடிவமைப்புக்களை அறிமுகம் செய்து அதனூடாக ஒரு வேலை வாய்ப்பை பெற்று கொடுக்கின்ற வன்னி ரெக்கின் வளர்ச்சிப்படியையும் இங்கு கூறவேண்டிய தேவையுள்ளது.

வன்னி ரெக் இரண்டாவது ஆண்டை நிறைவு செய்கின்ற இந்தச் சூழலில் முதலாவது ஆண்டில் இருந்ததைவிட இந்த இரண்டாவது ஆண்டில் புதிய வளங்கள் பலவற்றை பெற்றி ருக்கின்றோம் இதனை எமது புலம் பெயர்ந்த உறவுகள் அன்பளிப்பாக வழங்குவதன் மூலமா கத்தான் பெற்றுக் கொள்கின்றோம். இதனை பொருள் ரீதியாக எமது நிறுவனம் இரண்டாவது ஆண்டில் நிறையப் புதிய வளங்களை பெற்றிருக் கிறது.

இதனால் இவ்வருடம் கற்ற மாணவர்களும் நிறைய புதியவிடயங்களை உள்வாங்கக் கூடிய சூழல் இருந்தது. வன்னி ரெக்கின் அடுத்த



திட்டமாக புதியதொரு இடத்தில் நிரந்தரக்கட்ட டமாக நிறுவுவதற்குரிய திட்டங்களை மேற் கொண்டு இதனை ஒரு பல்கலைக்கழகமாக மாற்றி அமைப்பதற்குரிய முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றோம்.

இறுதியாக இந்த கணினியைப் பயன்படுத்தி உயர்தொழில் நுட்பத்தை எவ்வாறு அடையலாம் என்பதை உணர்த்துகின்ற இந்த "வன்னி விஷன் 05" என்ற கண்காட்சியை பார்ப்பதற்கு நான் நினைத்தேன் வன்னிப்பிராந்தியத்தில் உள்ள வர்கள் மட்டும் தான் வருவார்கள் என்று ஆனால் வெளிமாவட்டங்களில் இருந்து குறிப்பாக யாழ்ப் பாணம், வவுனியா மாவட்டங்களில் இருந்து ஏராளமான மக்கள், மாணவர்கள், தொழில் சார்ந்த நிறுவன ஊழியர்கள் எனப் பலர் வந்து பார்வை யிட்டுள்ளனர்.

எனவே நாங்கள் இந்தத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தினூடாக இன்னுமின்னும் புதிய வளர்ச்சிகளை அடைந்து வன்னிப்பிராந்தியத்தில் ஒரு உயர் தொழில் நுட்ப நிறுவனமாக வளர்ச்சியடைந்து இப்பகுதி மக்கள் தொழில்நுட்ப ரீதியாக நிறைந்த பயனை அடைவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

☆ ☆ ☆ ☆ ☆


# சிங்கள மயமாகிவரும் தமிழ் மக்களின் தலைநகரம்?

ப.துஷ்யந்தன்

அகிம்சையை போதித்த புத்தர் இன்று ஆக்கிரமிப்பின் சின்ன மாகிறார். மனிதனை மனிதனாக வழி நடத்துகின்ற தரும நெறிகளை சொல்லுகிற பெளத்த மதம் இன்று மிருக மனம் கொண்டவர்களினால் தன் நிலை இழந்து நிற்கிறது. ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை பெளத்தம் என்றால் அது சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் ஒரு சின்னம் எனப் பார்க்கும் அளவிற்கு கொடு மைப்படுத்தப்பட்டு காட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

கடந்த 15 ஆம் திகதி அதி காலை இரண்டு மணியளவில் திரு கோணமலை நகரப் பேருந்து தரிப்பு நிலையத்திற்கு அண்மையில் திடீ ரென தோன்றிய புத்தர்சிலை தமிழர் களது மனங்களில் ஒருவித பீதி உணர்வைத் தோற்றுவித்துள்ளது.

கண்கள்மூடிய தியான நிலையில் மிகவும் அமைதியான சுபாவத்துடன் தோன்றிய அந்த புத்தர் சிலை தமிழர்களை



போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகம்முன் மறியல் போராட்டம் செய்யும் தமிழ்ப் பெண்கள்

பொறுத்தவரை, பெரும் புயலுக்கு முன்னதான எச்சரிக்கையாகவே நோக்க வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட முன்அனுபவங்களால் அல்லற்பட்ட ஈழத் தமிழர்களால் இவ் விடயத்தை அவ் வாறாகத் தான் நோக்கமுடியும்.

தமிழீழத்தின் தலைநகரான திருகோணமலை இன்று மிகவேக மாகச் சிங்கள மயமாக்கப்பட்டு வரும் நிலையின்ஒரு அங்கமாகவே இந்தப் புத்தர் சிலையை நாம் நோக்க வேண்டும். திருகோணமலை நகரில் வசிக்கும் ஒருவரை நாம் தொடர்பு கொண்டு கேட்ட போது. அவர் ஏற்கனவே அரச நிர்வாகப் பொறுப்புகள் யாவும் திட்டமிட்ட ரீதியில் சிங்களவர்களிடம் வழங்கப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை ஐக்கிய ஓட்டோ சாரதிகள் சங்கம் மற்றும் திருகோணமலை தனியார் பேருந்து கழகம் போன்ற சில சங்கங்கள் சிங்களவர்களிடம் இருப்பதாக மிகவேதனையுடன் தெரிவித்தார்.

அண்மையில் திருகோண மலை நகரப்பகுதியில் திடீரெனத் தோன்றிய புத்தர் சிலை விவகாரம் திருகோணமலை ஐக்கிய ஓட்டோ சாரதிகள் சங்கத்தால் தோன்றிய விபரீதம் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இச்சங்கத் தினர் கடந்த சில ஆண்டுகளாக தமது வழிபாட்டிற்கென கூறி ஒன்றரை அடி உயரமுள்ள புத்தர் சிலை ஒன்றை தமது சங்கத்திற்கு அண்மையில் வைத்திருந்தனர் அதைத் தொடர்ந்து. அவ் விடத்தில் கடந்த 15 ஆம் திகதி அமைக்கப்பட்ட புத்தர் சிலை மூன்றரை அடிபீடத்தில் நான்கரை அடி சிலை வைக்கப்பட்டு மிகத் துலக்கமாகத் தெரிகிறது. இதன் உள்நோக்கத்தை அறிந்த திரு கோணமலை தமிழ் மக்கள் அதை எதிர்த்தார்கள் புத்தர் சிலை அகற்றப்படவேண்டும் எனக் கோரி நீதிமன்றம்வரை சென்றார்கள். நீதி மன்றமும் புத்தர் சிலை அகற்றப் படவேண்டும் எனத் தீர்ப்புக் கூறித் தனது கடமைமுடிந்து விட்டது என ஒதுங்கி விட்டது ஆனால் அங்கு நடப்பது அதிகார வெறியின் கை ஓங்கி காணப்படுவதையே காட்டு கிறது.

புத்தர் சிலையை சுற்றி சிறி லங்கா பொலிசாருடன் சிங்கள காடையர்களும், பெளத்த பிக்கு களும் தடிகள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் நிற்பதுடன் அங்கு நீதிக்காக குரல்கொடுக்கும் தமிழர் களைத் தாக்கியும் வருகின்றனர். குறிப்பாக பல தமிழ் இளைஞர்கள் சிங்களக் காடையர்களின் வாள் வெட்டிற்கு உள்ளாகியுள்ளனர். இதன் பின்னணியில் ஜே.வி.பி. எனும் சிங்கள பேரினவாத கட்சி செயற்படுவதாகத் தெரிகிறது. தொடர்ந்தும் திருகோணமலை நகரம் பதற்றம் மிகுந்ததாகவே காணப்படுகிறது. தாம் புத்தர் சிலையை அகற்றப் போவதில் லையென பேரின வாதிகள் வரிந்து கட்டிக்கொண்டு செயற்படுகிறார்கள். இவ் விடயம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப் பாளர் சி.எழிலன் கருத்துத் தெரிவிக் கையில்;

1990 ஆம் ஆண்டு திருகோண மலையில் நிகழ்த்தப்பட்டதை போன்ற பாரிய இனக்கலவரத்தை உருவாக்கும் சதித்திட்டத்தை சிங்களப் பொலிசாரும் காடையர் களும் இணைந்து மேற்கொண்டு வருவதாக எச்சரித்தார்.

புத்தர் சிலை விவகாரம் ஏன் இவ்வாறு பெரியளவில் பார்க்கப் படுகிறது என்பதை நாம் இங்கு ஆராய்ந்து பார்க்கவேண்டும் அவற்றுக்கு நீண்ட கால வரலாறு களை பார்ப்பதை விட அண்மைய போர் நிறுத்த உடன்படிக்கைக் காலத்தில் இடம் பெற்ற சம்பவங்களை உதாரணமாகக் கொண்டுபார்த்தாலே உண்மை புரியும். திருகோணமலை மாவட்டம் அன்பு வெளிபுரம்பகுதி ஒரு தமிழ்க் கிராமம். இக்கிராமத்தில் திருகோணமலை கண்டி வீதிப் பகுதியில் அண்மைக் காலத்தில் ஒரு புத்தர் சிலை அமைக்கப் பட்டுள்ளதுடன் அப்பகுதியில் சிங்களக் குடியேற்றம் நடத்தப்படு வதாற்கான முஸ்தீபுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரி கிறது.

விளாங்குளம் எனும் தமிழ்க் கிராமம் அங்கும் திருகோணமலை கண்டி வீதியில் கடந்த இரு வருடத்திற்குள் ஒரு பெளத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இவ் விடயமும் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவை தவிர கண்ணியா, வென் னீரூற்று வளாகத்திற்குள் அமைக் கப்பட்டிருக்கும் 'வெல்க்கம்' விகாரையின் அறிவிப்புப் பலகைகள் சுமார் 169 இடங்களில் வைக்கப்பட்டு அப்பகுதி சிங்கள பெளத்த பிரதேசம் போல் காட்சிப் படுத்தப்பட்டிருக்கிறது. இவ் அறி விப்புப் பலகை ஒன்று புகழ்பெற்ற இந்துக் கோவிலான கோணேசர் ஆலய வாயிலிலுள்ள கோட்டை யிலும் வைக்கப்பட்டி ருக்கிறது.

விளாங்குள விகாரை அமைப் பைத் தொடர்ந்து இராணுவப் பாதுகாப்புடன் சிங்களக் குடி யேற்றம் ஒன்று நடத்தப்படவிருந்த வேளை தமிழ்மக்களின் போராட் டத்தால் அம் முயற்சி மட்டுப் படுத்தப்பட்டிருக்கிறது. இருந்த போதும் சில சிங்களக் குடியேற் றங்கள் அங்கு இடம்பெற்றி ருக்கின்றன..

இவைதவிர,கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன் தமிழர்களின் மீன்பிடிக் குடியிருப்புகளாகவிருந்த கோணேசர் ஆலய தீர்த்தக் கரையை அண்டிய ஒரு கிலோ மீற்றர் நீளமான கடற்கரைப்பகுதி இன்று ''சமுத்திரகம' என்ற சிங்களக் குடியேற்றமாகத் காணப் படுகிறது. இப்பகுதியில் பூர்வீக மாகத் தொழில் செய்துவந்த தமிழர் கள் அச்சம் காரணமாக இடம் பெயர்ந்து வாழ்கிறார்கள். அப் பகுதியால் கோணேசர் ஆலயம் செல்லும் பக்தர்களும் இன்று அங் குள்ள சிங்களக் குடியேற் றத்தால் அசெளகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.



சர்ச்சைக்குரிய புத்தர் சிலை

இப்படிப்பட்ட பேரினவாத சக்தி களின் அத்துமீறிய நடவடிக்கைகள் திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்தவண்ணமேயிருக்கிறது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன் திருகோணமலை நகர பொது விளையாட்டு மைதானக் காணியில் சுனாமி அகதிகளுக்கான வீடுகள் என்ற போர்வையில் ஜே.வி.பியினர் சிங்களக் குடியேற்றம் ஒன்றை நடத்த முயன்றனர். இவ்விவகாரம் அப் பகுதி மக்களின் கடும் போராட்டத்தின் பின் நிறுத்தப்பட்டது என்பது இங்கு நோக்கப்பட வேண்டும்.

போர்நிறுத்த உடன்படிக்கை அமுலிலிருக்கும் இக்கால கட்டத்தில் சிறிலங்கா பேரின வாதிகளின் அத்துமீறிய செயற் பாடுகள் தொடர்ந்த வண்ண மிருக்கும் இச் சூழல்நிலையில் திரு கோணமலை தமிழர்கள் வாழும் பகுதி ஆக்கிரமிப்பு வலைகளிற்குள் விழுந்து கொண்டிருக்கும் நிலை தொடருமானால் தமிழ்மக்கள் தமதுமண்ணைக் காப்பாற்ற தீவிரநடவடிக்கையை மேற் கொள்வது தவிர்க்க முடியாத தாகவே இருக்கும் இந்நிலை ஏற்படுவதற்கான காரணங்களையே சிங்கள பேரினவாதம் இன்று திருகோணமலையில் செய்து கொண்டிருக்கிறது.

## ஒட்டுசுட்டான் பகுதியில் சிறந்த கால்நடைவளர்ப்போர் தெரிவு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பகுதியில் கால் நடை வளர்ப்போருக்கிடையே சிறந்த கால்நடை வளர்ப்போரை தெரிவுசெய்து அவர்களுக்கு சான்றி தழும் பரிசிலும் வழங்கப்பட வுள்ளது.

ஒட்டுசுட்டான் கால்நடை வைத்தியர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கால்நடைவளர்ப் போரைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இம்மாதம்.31 ஆம் திகதிக்கு முன் உங்கள் விண்ணப்பங்களை ஒட்டு சுட்டான் கமநல சேவை நிலையத் தில் இயங்கும் கால் நடைவைத்திய நிலையத்தில் அலு வலக நேரங் களில் பெற்றுபூர்த்தி செய்து கொள் ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. (05)

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

மாபெரும்மாட்டு வண்டிச் சவாரி ஒன்று எதிர்வரும்29ஆம்திகதி அன்று மாலை 2.00 மணிக்கு புளியம் பொக் கணை சவாரித்திடலில் நடைபெற வுள்ளது. இப்போட்டிக்கு பல முன்ன ணிச் சவாரி மாடுகள் பங்கு பற்ற உள்ளனஎன கிளிநொச்சி மாவட்ட சவாரிச் சங்கத்தினர் தெரிவித் துள்ளனர். (12)

## கோழ்வளர்ப்போருக்கான தடுப்பு மருந்து விநியோகம்


கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோழிப் பண்ணை யாளர்களுக்கான கோழிநோய்த் தடுப்பு மருந்துகள் பிரதி செவ்வாய்க் கிழமைகளில் காலை 8.00 மணிமுதல் 11.00 மணிவரை முள்ளியவளை சிறுவர் பூங்காவுக்கு எதிரில் அமைந்துள்ள கட்டடத்தில் வழங்கப்பட்டு வருகிறது என்பதனையும் கோழிவளர்ப்போர் தவறாது இத் தடுப்பு மருந்து களைப் பெற்று உங்கள் கோழிகளை இறப்பில் இருந்து பாதுகாக்குமாறும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினர் அறியத்தருகின்றனர்.



சீடா நிறுவனப் பிரதிநிதிகளான அன்மேரிலெப்றைஸ், றோறிகிளி-பேட், சியாமளா சிவகுருநாதன் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை கிளி நொச்சியில் உள்ள மனித உரிமைகள் செயலகத்தில் அதன் இயக் குனர்கருணாரெட்ணம் அடிகளாருடன் மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டிருப்பதைப்படத்தில்காணலாம்.

படம்:-குகன்

# அளவெட்டி கும்பிழாப்பிள்ளையார் தேர்த்திருவிழா சிறப்பிதழ்



## பிரதம சிவாச்சாரியாரின் ஆசீர்வாதம்

ஆன்மாக்கள் லயப்படுகின்ற இடமாகிய ஆலயங்களில் நடைபெறும் ஒவ்வொரு விழாக்களும் ஒவ்வொரு அர்த்தமுள்ள தத்துவங்களை விளக்குவதாக அமைகின்றன. அந்தவகையில் இன்றைய தேர்த்திருவிழாவில் இறைவன் தேரில் அமர்ந்து மக்களுடைய மும்மலங்களையும் களைந்து அவர்கள் மனதில் உள்ள தீய எண்ணங்களையும் அழித்து இரட்சிக்கின்றார். இறைவன் தேரில் அமர்ந்துவரும் காட்சி மனதைவிட்டகலாத ஒரு திருக்காட்சியாகும். இன்றைய தினம் இத்திருக்காட்சியை காணும் சகல அடியார்களுக்கும் இறைவனாகிய விநாயகர், அஷ்ட ஐஸ்வரங்களையும் கொடுத்து ரட்சிக்கவேண்டும் என வாழ்த்தி இறைவனை வேண்டி ஆசி கூறுகிறேன்.

பிரதம குருக்கள்
இ. விஸ்வெஸ்வரக் குருக்கள்
(சந்திரன் ஐயா)


**அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் அளவெட்டி**

தரமான நியாயமான விலைக்கு நாடுங்கள் எமது நிறுவனத்திற்கு
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

**விநாயகர் களஞ்சியம்**
அன்
**தொலைத்தொடர்பு சேவை**
இன்ரநெற் அழைப்பு பெறலாம்
0602212878-0044 0602212878
0214591935 -044214591935

**ரூபன் பல்பொருள் வாணிபம்**
அன்
**பான்சி ஹவுஸ் -பார்மசி**
அன்பளிப்பு பொருட்கள், அழகுசாதனப்பொருட்கள் மற்றும் பால்மா, மருந்து வகை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, கரவெட்டி.

**சுகப்பிரதா**
**தொலைத்தொடர்புசேவை**
உள்நாட்டு வெளிநாட்டு இன்ரநெற்பக்ஸ் யாழ்-கொழும்பு வான் சேவை அனைத்திற்கும் தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம்.
021-2227123 -094-212227123
உள் 0602213222 -094- 602218322 வெளி
021-4591285 -094-214591285

**கஜமுகன் விற்பனை வாணிபம்**
அழகுசாதனப்பொருட்கள், பாடசாலை உபகரணப்பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், துணிவகைகள், பாதணிகள், குளிர்பான வகைகள், அலுமினியப்பொருட்கள், கணனி அச்சக வேலைகள், போட்டோப்பிரதி, தொலைத்தொடர்பு சேவை ஒரே கூரையின் கீழ் பெற.
அருணோதய கல்லூரி அருகாமை, அளவெட்டி.
தொ.பே: 0602 212517
021-2227612


**தரன் தையல் அகம்**
தாவடி, சுன்னாகத்தில் இயங்கி தற்போது அளவெட்டியில் ஆண்கள், பெண்கள் ஆடைகள் நவீன முறையில் தைத்துக்கொடுக்கப்படும்.
அருணோதய கல்லூரியடி,
அளவெட்டி.

**கதிர்காமசிங்கம் அன் சன்**
**பல்பொருள் வாணிபம்**
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி, யாழ்ப்பாணம்.

(சி-11979)


# பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

# தேர்த் திருவிழா சிறப்பிதழ்



## திருநெல்வேலி


இராசரத்தினம் சிவனேசன்
**மதுசன் கலைக்கூடம்**

அரசரத்தினம் அயந்தன்
**செல்வவதி ஓவியக்கலையகம்**

பொன்னுச்சாமி நித்தியானந்தம்
**உமா கொம்மினி கேசன்**


கனகராஜா ராஜ்பதி
**கலைவாணி ஓவியக் கலையகம்**

செல்லையா பாலச்சந்திரன்
**ஸ்ரீகாளிகா சிற்பாலயம்**

கனகரத்தினம் தர்ம குமார்
**அம்பாள் ஸ்ரோஸ்**

(சி-11980)
பத்மநாதன் சுரேந்திரன்
**அர்த்தநாரீஸ்வரர் சிற்பாலயம்**

குலவாணி சிற்பாலயம் தேர் மஞ்சம், சப்பறம், தங்கரதம், வாகனம் ஏனைய சிற்பவேலைகள் ஆகம சிற்பாஸ்திர விதிப்படி வடிவமைக்கப்படும். வடிவமைப்பாளர், ப.கோகுலன்
அரசடி வீதி திருநெல்வேலி கிழக்கு – யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777112770



# மன்னார்-மாதோட்டம்-அருள்மிகு திருக்கேதீச்சரப்பெருமான் திருக்கோவில்
# தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்
## 22-05-2005






## திருக்கேதீச்சரத்தில் இன்று தேர்த்திருவிழா

ஈழத்து சிவாலயங்களுள் வரலாற்றுப் புகழ் மிக்கதாகவும், நாயன்மார்களால் பாடல் பெற்ற பெருமைக்குரியதாகவும், திகழ்ந்து மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களுடன் விளங்கிக் கொண்டிருப்பது திருக்கேதீஸ்வரத் திருத்தலம். ஈழத் திருநாட்டின் வடபால் உள்ள மன்னாருக்கு அண்மையில் மன்னார்த் தீவினை வட மாகாணப் பெருநிலப் பரப்புடன் இணைக்கும் பாலத்தின் மார்க்கமாக மன்னாரிலிருந்து தென் திசையாக சுமார் 6.5 கல் தூரத்திலும், வடமேல் கடலோரத்திலிருந்து சுமார் 1/2கல் தூரத்திற்கு அப்பாலும் இத் தலம் அமைந்துள்ளது.

இப் பெருந் தலம் சீரும் சிறப்புமாக மிளிர்ந்து காலப போக்கில் பல பின்னடைவுகள் நிகழ்ந்து சோழ மன்னர்களால் புதிதாக அமைக்கப்பட்டது. முதலாம் இராஜராஜ சோழ மன்னராலும், அவரது தனையன் இரண்டாம் இராசேந்திர சோழ மன்னராலும், கருங்கற்களால் பெரிய கோயிலாகவும், வானளாவிய கோபுரங்களாகவும், அழகு மிளிர அமைக்கப்பட்டு நிவந்தம் வழங்கப்பட்டது. 1540 ஆம் ஆண்டில் அன்னியரின் படை யெடுப்பால் ஆலயம் தகர்க்கப்பட்டு சீரழிக்கப்பட்டது.

உலகில் வாழ் சைவப் பெரு மக்களும் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையும் முன் போல் ஆலயத்தைக் கருங்கற்களால் அமைக்க எண்ணி முதற் கட்டமாக மூலவர்க்கும் (சிவன்) கௌரியம் பாளுக்கும் கருங்கற் திருப்பணி செய்து 1976ஆம் ஆண்டில் பெருஞ்சாந்திவிழா எடுக்கப்பட்டது. இதன் இரண்டாங்கட்டக் கருங்கற் திருப்பணிக்காக நாற்பது ஆண்டுகட்கு முன் தமிழ் நாடு மாமல்லபுரம் அரசினர் சிற்பக் கலைக் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு மகாமண்டபம், திருச்சுற்று (குறடு) மண்டபங்களுக்குரிய சித்திரத்தூண்களும் அழகிய நாவலர், மண்டோதரி, குதிரை, சிம்மம், கொடிப்பெண், பாவை விளக்கு, இராஜராஜசோழன், நம்பியாண்டார் நம்பி, ராகு, கேது சிற்பங் களும் (படிமம்) செதுக்கப்பட்டு சென்னைத் துறை முகத்திலிருந்து கொழும்புத் துறைமுகத்திற்குக் கடற் கப்பல் மூலம் கொணர்ந்து அவையனைத்தும் (சிற்பங்கள், தூண்கள்) திருக்கேதீச்சரத்தில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளன. கொடியேற்றப்பெருவிழா நிறைவடைந்ததும் இத் திருப்பணியைத் தொடரத் திருகேதீச்சரத் திருப்பணிச் சபை ஆவலுடனுள்ளது. இத் திருப்பணியினை நிறைவாகச் செய்வதற்கு ரூபா இருபது கோடி செலவாகுமென உத்தேசமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே இத்திருப்பணிக்கு சைவ அடியார்களின் பேருதவியினை ஆலய திருப்பணிச்சபை எதிர்பார்த்து நிற்கின்றது.

**கௌரி அம்பாள் உடனுறை திருக்கேதீச்சரப்பெருமானின் பாதார விந்தங்களை பணிந்து நிற்கின்றோம்.**

Sanshigaa சன்சிகா நகையகம்
சிறியவர் முதல் பெரியோர் வரை
யாவரும் விரும்பி அணியும் தங்க
ஆபரணங்களை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
114, BAZAAR STREET,
VAVUNIYA
TEL; 024-2224028
யாழ் கணேசா நகையகம்
124,செட்டியார் தெரு,
கொழும்பு -11
(சி-11908)

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்.
கணேசா நகையகம்
123,பஜார் வீதி, வவுனியா. TP : 024-2222464
கணேசா நகையகம் யாழ் கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். TP - 021 222 5987
124,செட்டியார் தெரு, கொழும்பு- 11. TP - 011-2336252
(சி-11917)

அழகிய தங்க நகைகளை அசல்
22 கரட் தங்கத்தில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
வளர்மதி நகைமாடம்
பெரியகடை, மன்னார். தொ.பே:023-2232072
(சி-11909)

நாயன்மார்கட்டு மெடிக்கல் சென்ரர்
NAYANMARKADDU MEDICAL CENTRE
DR.MRS.C.ARASAKONE,
D.A.M.(Cey)R.A.M.p.No.5213,
Births and Deaths
Medical Registrar,
Mannar Town East,
Main Street Mannar,
T.P-023-2232415
(சி-11910)
DESHAKEERTHI-
DR.A ARASAKONE,
Justice of the Peace(Whole Island)
Regd.No.2000/08/NE/WI/B/699
Mannar,Srilanka,
D.A.M.CEY
R.A.M.P5215

பொன்னம்பலம் அரிசி ஆலை
PONNAMPALAM RICE MILL
பொன்னம்பலம் அரிசி ஆலை
A-9வீதி, பரந்தன் - கிளிநொச்சி
(சி-11916)

காலத்தால் அழியாத
கண்கவர் தங்கநகைகளை
சுத்தமான 22கரட்
தங்கத்தில் உங்கள்
எண்ணம் போல்
தெரிவு செய்திட ...
லாவண்யா ஜுவல்லறி
இல:45,பெரியகடை,மன்னார். தொ.பே:023-2232043
இல:60 தர்மலிங்கம் வீதி, வவுனியா. தொ.பே:024-2222484
(சி-11911)

Ambiga Jewellers
மன்னாரில் மங்கையின் மனங்கவர்ந்த
தங்க நகை மாளிகை....
அம்பிகா ஜ்வலர்ஸ்
பெரிய கடை, மன்னார்.
Grand Bazaar, Mannar, Tel : 023 - 2232350
(சி-11912)

புதுப்பொலிவுடன் மின்னும் 22கரட் தங்க நகைகள்
உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
லெக்ஷ்மி ஜுவலர்ஸ்
பெரியகடை,மன்னார். தொ.பே:023-2232386
(சி-11914)
அபிராமி ஜுவலர்ஸ்
பெரியகடை,மன்னார். தொ.பே:023-2232067
(சி-11913)


சிவனருட்செல்வன் அரிசி ஆலையின்
புதிய அறிமுகம்
பூநகரி மொட்டைக்கறுப்பன் குத்தரிசி
வன்னிப்பெருநிலப்பரப்பில் வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப
100 வீதம் கல், மண் நீக்கப்பட்ட தரமான
பூநகரி மொட்டைக்கறுப்பன் குத்தரிசியினை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
சிவனருட்செல்வன் அரிசி ஆலை
உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.
சம்மந்தன் அரிசி ஆலை
இல:93, கந்தபுரம், கிளிநொச்சி.
(சி-11907)

ஒரே கூரையின் கீழ்
குளிரூட்டப்பட்ட காட்சியறையில்
உங்கள் உந்துருளி தெரிவுகளுக்கு!
சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்
நாயகி கட்டடம்,பரந்தன், கிளிநொச்சி. தொ.பே:021-228 5072
(சி-11915)

## உலகக்கோப்பைத் தொடருக்கு நான்கு புதிய மைதானங்கள்

உலகக் கோப்பைத் தொடருக்கு நான்கு புதிய மைதானங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 2007 உலகக் கோப்பைக் கிரிக்கெட் தொடரை மேற்கிந்தியத்தீவு ஏற்று நடத்துகிறது. லீக் சுற்றுப் போட்டிகளுக்கான மைதானங்களை தேர்வு செய்யும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. முதல் கட்டமாக கடந்த ஜூலையில் கென்சிங்டன் ஓவல்(பார்படோஸ்), சபீனா பார்க் (ஜமேக்கா), விவியன் ரிச்சர்ட்ஸ் மைதானம் (அன்டிகுவா), குயின்ஸ் பார்க்(கிரீனடா), குயின்ஸ் பார்க் ஓவல் (டிரினிடட்), தி நியூவேர்னர் பார்க் (செயின்ட் கிட்ஸ்), பியூசிஜோர்(செயின்ட்லூசியா), கயானா ஆகிய எட்டு மைதானங்கள் தேர்வு செய்யப்பட்டன. இந்தப் பட்டியலில் டிரினிட்டில் பிரயன் லாரா பெயரில் கட்டப் படும் புதிய மைதானம், டபிள்யூ.எஸ்.ஓவல் (பிரிட்ஜ்டவுன், பார்படோஸ்), டிரெலவ்னி மைதானம் (ஜமேக்கா), ஆர்னஸ் வேலே (செயின்ட் வின்செண்ட்) என நான்கு புதிய மைதானங்கள் பட்டியலில் இணைந்துள்ளன. மைதானப் பணிகள் விரைவில் முடிவடையுமென அமைப்பு இயக்குனர் டான் லாக்கர்பி தெரிவித்தார்.

# சிறிலங்கா கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக ரொம்மோடி?



அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரொம்மோடி சிறிலங்கா கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராக வருவது உறுதியாகியுள்ளது. இவர் இந்தியாவின் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் கிரேக் ஷப்பல் அவ்விடத்தை நிரப்பியதால் மோடியின் சிறிலங்காவுக்கான நியமனம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இதனை இடைக்கால கிரிக்கெட் சபைத் தலைவர் ஜயந்த தர்மதாசவும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

தற்போது வோர்சஸ்ட்சயர் கழகத்துக்கு பயிற்சி வழங்கிவரும் இவர் சர்வதேசப் பயிற்றுவிப்பாளராக வரவிருக்கிறார்.

சிறிலங்கா அணிக்கு ஜோன்டைசன் பயிற்றுநராக இருந்த வேளை நியூசிலாந்துடன் தோல்விகண்டதையடுத்து டைசனை தொடர்ந்தும் வைத்திருக்க சபை விரும்பாததையடுத்து புதிய பயிற்றுநர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்தது.

மோடியின் ஒப்பந்த காலம் இன்னும் முடிவுக்கு வராத நிலையிலும் வோர்சஸ்ட்சயர் அணி அவர் சர்வதேசப்பயிற்றுநராக வருவதற்கு வாய்ப்பளிப்பதாகவும் அவரை விடுதலை செய்வதாகக் கூறப்படுகிறது. 39 வயதான மோடி எட்டு டெஸ்ட் போட்டிகளில் மட்டும் பங்கேற்றிருப்பினும் நிறைய ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ளார். அவரது இறுதிப் போட்டி 1999ஆம் ஆண்டில் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான உலகக்கிண்ண இறுதிப் போட்டியாகும்.

## 20 ஓவர் கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் நடத்தத் திட்டம்



பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 20 ஓவர்கள் கொண்ட போட்டித் தொடர் ஒன்றை தனது நாட்டில் நடத்த திட்டமிட்டுள்ளது. அதன்படி வரும் ஒக்ரோபரில் அந்நாட்டுக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணியுடனும் 2006 ஆம்ஆண்டு பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணியுடன் நடைபெறும் போட்டித் தொடரில் ஒரு போட்டியில் 20 ஓவர்கள் கொண்ட போட்டியில் மோதவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு இவ்விரு அணிகளும் சம்மதம் தெரிவித்திருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியார் கான் தெரிவித்துள்ளார்.

இதுவரை 20 ஓவர்கள் கொண்ட சர்வதேசப் போட்டிகள் நடைபெறவில்லை என்பதும் இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புதிய பயிற்சியாளர் தெரிவில் எனக்குத் தொடர்பில்லை ஸ்மித்




தென்னாபிரிக்க அணியின் புதிய பயிற்சியாளர் நியமனத்தில் தனக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்று அணித்தலைவர் ஸ்மித் விளக்கமளித்துள்ளார்.

ரேஜென்னிங்சின் பதவிக்காலம் முடிந்ததை அடுத்து, அதிகம் அறிமுகமில்லாத மிக்கி ஆர்தர் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். 37 வயதான ஆர்தர் அனுபவமிக்கவர். உள்ளூர்ப் போட்டிகளில் பிரபலமான இவர் சர்வதேச அளவில் பங்கேற்றதில்லை. சிறந்த பயிற்சியாளராக விளங்கியதால் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வாய்ப்பு அளித்தது.

இது பற்றி தென்னாபிரிக்கத் தலைவர் ஸ்மித் நேற்றுக் கூறுகையில்; " மிக்கி ஆர்தர் நியமனத்தில் எனக்கு எவ்வித தொடர்பும் கிடையாது. நானும் ஜென்னிங்சும் பலமுறை வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளோம். அது தலைவர் பயிற்சியாளரிடையே வழக்கமாக நடக்கும் வாக்குவாதம். புதிய பயிற்சியாளரைத் தேர்வு செய்தமுறை திருப்தி அளித்தது. ஆர்தர் மிகவும் கண்டிப்பானவர். இவரது பயிற்சியில் அணி சிறப்பான வளர்ச்சிகாணும்," என்று நம்பிக்கை தெரிவித்தார்.

# பிரேசில் கால்பந்து அணியிலிருந்து கபு, கார்லோஸ் நீக்கம்



கான்படரேஷன் கால்பந்து கோப்பைக்கான பிரேசில் அணியிலிருந்து கபு,கார்லோஸ் நீக்கப்பட்டுள்ளனர். ஜேர்மனியில் வரும் ஜூனில் கான்படரேஷன் கோப்பைக்கான கால்பந்துப் போட்டிகள் நடக்கவுள்ளன. இதற்கான 23 பேர் அடங்கிய பிரேசில் அணி நேற்று முன் தினம் அறிவிக்கப்பட்டது. மூத்த வீரரான கபு, ராபர்டோ கார்லோஸ் இருவரும் நீக்கப்பட்டுள்ளனர். வீரர்கள் தேர்வு பற்றி பயிற்சியாளர் கார்லோஸ் பெரைரா கூறுகையில் "இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலே தேர்வு நடந்துள்ளது. தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள அணி சிறப்பாக செயற்படும்" என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கான்படரேஷன் தொடரில் முதல் சுற்றில் பிரேசில்-கிரீஸ், ஜப்பான்,மெக்சிக்கோவை எதிர்த்து விளையாடுகிறது.

## பிரெஞ் ஓபன்டென்னிஸ் நாளை ஆரம்பம் பெடரருக்கு வாய்ப்பு



பிரெஞ் ஓபன் முதல் சுற்றில்முதல் நிலை வீரரான பெடரருக்கு சாதகமாகவுள்ளது. இவர் அறிமுகமில்லாத ராபின் சோடர் லிங்கை எதிர்த்து விளையாடுகிறார்.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான பிரேஞ் ஓபன் நாளை தொடங்குகிறது. இதில் உலகின் முதல்நிலை வீரரான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர், அமெரிக்காவின் ஆண்டி ரோடிக், ஸ்பெயிலினின் ரபெல் நாடல் போன்ற முன்னணி வீரர்கள் பலரும் பங்கேற்கின்றனர்.

முதல் சுற்றில் பெடரர், சுவீடனில் சோடர்லிங்கை சந்திக்கவுள்ளார். அவுஸ்திரேலியன், விம்பிள்டன், யு.எஸ். ஓபன் ஆகிய மூன்று கிராண்ட் ஸ்லாம் தொடர்களிலும் பெடரர் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இவர் பிரெஞ் ஓபன் கோப்பையைக் கைப்பற்றினால் நான்கு கிராண்ட் ஸ்லாம் தொடரையும் வென்ற ஆறாவது வீரர் என்ற பெருமையைப் பெறலாம் காலிறுதியில் இவர் ஆர்ஜென்டீனாவின் நள்பாந்தியனையும் அரையிறுதியில் ரபெல் நாடாலையும் சந்திக்க வாய்ப்புள்ளது.


பெண்கள் பிரிவில் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் டேவன் போர்ட், சுலோவோனியாவின் கேத்தரினா ரிபோட்னிக்கை சந்திக்கிறார். ரஷ்யாவின் மாரியா ஷரபோவா, சகநாட்டு வீராங்கனையான லினாட்ஸ் கயாவையும் 2003இல் சம்பியன் பட்டம் வென்ற பெர் ஜியத்தில் ஜஸ்டின் ஹெனின், கோன்சிதா மார்ட்டினசை எதிர்த்து விளையாடுகின்றனர்.






இத்தாலியின் உடினே நகரில் நடந்த இத்தாலியன் கோப்பைக்கான கால்பந்து அரையிறுதிப்போட்டியில் ரோமா 2-1 என்ற கோல் கணக்கில் உடினேசே அணியை வென்றது. இந்தஅணிக்கானகோலை அடித்த மகிழ்ச்சியில் மான்சினி.

## உலகக்கோப்பை டென்னிஸ் ஆர்ஜன்டீனா இறுதிப்போட்டியில்



உலகக் கோப்பை டென்னிஸ் தொடரில் சிலி அணியை வீழ்த்தி ஆர்ஜென்டீனா இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

ஜேர்மனியிலுள்ள டஸ்சல்டார்ப் நகரில் உலகக் கோப்பை டென்னிஸ் தொடர் நடந்து வருகிறது நேற்று முன் தினம் நடந்த போட்டியில் ஆர்ஜென்டீனாவின் கஸ்டன் காடியோ 6-4,6-2 என்ற நேர் செட்களில் சிலி வீரர் பெர்னாண்டோ கோன்சலேசை வீழ்த்தினார்.

மற்றொரு போட்டியில் ஆர்ஜென்டீனாவின் கில்லர்மோ கேனஸ் 6-2,1-6, 6-3 என்ற செட்களில் சிலியின் நிகோலஸ் மாசுவை தோற்கடித்தார்.

இரட்டையர் போட்டியில் ஆர்ஜென்டீனாவின் கில்லர்மோ கோரியா-இக்னசியோ சேலா ஜோடி 6-4,6-3 என்ற நேர் செட்களில் அட்ரியன் கார்சியா ஹெர்மஸ் கமோனலை வீழ்த்தியது. இந்த வெற்றிகளின் மூலம் இந்தத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஆர்ஜென்டீனா தகுதி பெற்றது.

# மெய்வல்லுநர் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தினால் அடுத்த மாதம் நடாத்தப் படவுள்ள மெய்வல்லுநர் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தமது கற்கும் பாடசாலைகள் விளையாட்டுக்கழகங்கள் மற்றும் தனிப்பட்ட முறையிலும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

10,12,14 வயதுப் பிரிவினர்களுக்கான போட்டிகள் அடுத்த மாதம் 10 ஆம் திகதி இடம் பெறவுள்ளமையால் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

16,18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டிகள் யூன் 30 ஆம் மற்றும் ஜூலை முதலாம் திகதியும் இடம் பெற இருப்பதினால் ஜூன் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பும்படியும் வேண்டப்பட்டுள்ளனர்.

விண்ணப்பங்களை யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் விளையாட்டு உத்தி யோகத்தர்களிடமோ அன்றி யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்க செயலாளர் செ.இராமணனிடமோ சமர்ப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)


# கால்பந்து இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும்

புத்தூர் எவரெஸ்ற் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென் நீக்கிலஸ் மோதுகின்றது.

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் விதுசன் நகையக அனுசரணையுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வு எவரெஸ்ற் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி அவர்களும் சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (சு,33)

யாழ்ப்பாணம்



**சிந்தனைக்கு**

ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புத மான தியாகத்தில் உருவாகிவரும் எமது தாயகத்தை, ஒரு உன்னதமான மேன்மை யான - சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 22-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சந்தர்ப்பம் வழங்கும் அரசு

திருகோணமலை மாவட்டத்தில் திடீரெனத் தோன்றிய புத்தர் சிலையால் எழுந்த பதற்றம் ஐந்து நாட்களாகியும் நீடிக்கின்றது. சிறிலங்கா பொலிசாரின் ஒத்துழைப்புடன் சிங்களக் காடையர்களின் தாக்குதல்கள், கைக்குண்டுவீச்சுக்கள் என்பனவற்றால் தமிழ் மக்கள் பெரும் பீதியுடனும், அச்சத்துடனும் வாழ வேண்டியதாகியுள்ளது.

தமிழ் மக்கள் தமது உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். ஆனால், இவ்விடயத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவால் எந்தளவிற்குத் தமிழ் மக்களுக்குப்பாதுகாப்பு வழங்க முடியும் என்பது கேள்விக்குரியதே. இன்றைய நிலையில் வன்முறையால் தமிழ் மக்களுக்கு இழப்பு ஏதும் ஏற்பட்டால் அதனை நேரில் சென்று பார்வையிட மட்டுமே கண்காணிப்புக்குழுவால் முடியும். பார்வையிட்டால் கூட இதற்கு யார் காரணம் என்ற ஊகத்தைக் கூட கண்காணிப்புக்குழு வெளியிடமாட்டாது என்பதே கடந்தகால அனுபவமாகும்.

திருமலையில் பதற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து அபாயமானதொரு கட்டம் நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது என்பது வெளிப்படையானது. ஆனால் அரசாங்கம் இதனை ஒரு புறம் இருட்டடிப்புச்செய்து வருவதோடு மறுபுறத்தில் இதனைத் தடுத்து நிறுத்த தீவிரமாக முனையாது மிகவும் மெதுவாகவே செயற்பட்டு வருகின்றது.

இது வன்முறையை வளர விடுவதற்கு அரசால் வழங்கப்படும் சந்தர்ப்பமாகவே கொள்ளத்தக்கது. 1977 ஆம் ஆண்டிலும் 1983 ஆம் ஆண்டிலும் சிங்கள ஆட்சியாளர்கள் இவ்வாறே நடந்து கொண்டார்கள். அதாவது ஆயுதப்படையினரின் உதவியுடன் குண்டர்கள், தமிழர்கள் மீது தாக்குதல்களை நடாத்திப் பேரழிவுகளை ஏற்படுத்தும் வரை அரசாங்கம் வாளாதிருந்தது என்பதே வரலாறாகும்.

இந்த வகையிலேயே தற்பொழுதும் அரசாங்கம் திருமலையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதாவது விரைந்து செயற்பட்டு அமைதிச் சூழ்நிலை உருவாக்குவதில் அரசாங்கம் அக்கறையற்றுள்ளது என்பதே உண்மையாகும். அவ்வாறு இல்லாது விடில் நீதிமன்ற ஆணையை நிறைவேற்றுமாறு சனாதிபதி சந்திரிகாவோ அன்றி அவரது பிரதியமைச்சரோ இதுவரையில் உத்தரவிட்டிருத்தல் வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைக்கான கோரிக்கைகள் வலுவடையும் போதோ அன்றி இனப்பிரச்சினைத்தீர்வு தொடர்பான சிறு முன்னேற்றம் காணும்நிலை உருவாகும். போதோ சிங்களப் பேரினவாதிகள் இனவன்முறையைத்தூண்டிவிடுவதும் அதனை ஆட்சியாளர்கள் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருப்பதும் வழமையானதொரு செயற்பாடேயாகும்.

தற்பொழுது அத்தகையதொரு சூழ்நிலையே நிலவுகின்றது. அதாவது சுனாமி மீள் கட்டமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்க வேண்டியதொரு நிர்ப்பந்தத்திற்குள் அரசாங்கம் உட்பட்டிருக்கையில் தமிழ்மக்கள் மீது இவ்வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இவ்வன்முறை திருமலை நகரில் புத்தரின் சிலை அமைக்கப்பட்டதுடன் ஆரம்பமாகினும் இதன் பின்னணியில் அரசியல் சக்திகள் முழு அளவில் செயற்படுவது ஒன்றும் பரம ரகசியமல்ல. அதாவது ஆட்சியில் பங்குவகிக்கும் ஜே.வி.பியினரிலிருந்து ஆயுதப்படையினர் வரையில் இதன் பின்னணியில் உள்ளனர்.

அதாவது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதன் மூலம் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் இருந்து அனைவரதும் கவனத்தை திசை திருப்பிவிடுதலே நோக்கமாகும். ஆனால் இதில் தனியாக பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் சக்திகள் மட்டும்தான் பங்குகொண்டுள்ளன என்பதல்ல. பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவாகப் பேசும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பங்குண்டு.

அவ்வாறு இல்லாது விடின் திருமலையில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் பதற்றத்தை அவரால் ஆரம்பத்திலேயே, ஏன் ஏற்படும் முதலே தடுத்திருக்கமுடியும். அதுதான் இயலாது போனாலும்கூட இன்றைய நிலை வரை வளரவிடாது தடுத்திருத்தல் முடியும். இதற்கு நீதிமன்றத் தீர்ப்பும் அவரது கட்டுப்பாட்டின் கீழ் முப்படைகளும் அவருக்கு உதவியாக இருந்திருக்கும்.

ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி இதனைத்தடுத்து நிறுத்த முற்படவில்லை. அவருக்கு திருமலையில் இன்று உருவாகியுள்ள பதற்ற நிலையை எவ்வாறு தனது அரசியல் எதிர்காலத்திற்குச் சாதகமாக்கிக்கொள்ளலாம் என்பதே சிந்தனையாகும். அதாவது புத்தர் பெருமான் போதித்த காருண்யம், சகிப்புத்தன்மை என்பவை சிறிலங்காவிலுள்ள பௌத்தர்களிடம் மட்டும் ஏன் இவ்வாறான கொலைவெறியாகவும், வன்முறையாகவும் வளர்ச்சி கண்டது? என்பதே அனைவரிடமும் உள்ள கேள்வியாகும் ஏனெனில் இவர்களின் நடவடிக்கைகள் பௌத்த மதத்தின் பெயரில் மேற்கொள்ளப்படுவதினால் அதுவுமல்லவா கேவலமடைகிறது?.

# பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படாவிட்டால் இலங்கையின் கௌரவம் பாதிக்கப்படும்

## அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடற்கோள் அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பொன்றை அரசாங்கம் ஏற்படுத்தாவிட்டால், உலக நாடுகள் முன் இலங்கையின் கௌரவம் வெகுவாகப் பாதிக்கப்படுமென சிறிலங்கா பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சனாதிபதி ஆற்றிய உரை குறித்து பல்வேறு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டாலும், அந்த உரை மிகவும் வரவேற்கத்தக்கதொன்று. மிகவும் நீண்டகாலம் பிடிக்கக் கூடிய இனப்பிரச்சினைத்தீர்வு விவகாரத்தைவிட, தற்போது அவசர பிரச்சினையாக இருக்கின்ற கடற்கோளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகின்ற விடயத்தில் கவனம் செலுத்தப் படவேண்டியது அவசியமானது.

உலக நாடுகளில் உள்ளவர்கள் பத்துடொலரும், ஐந்து டொலருமாக நிதியுதவிகளைச் சேகரித்து கடற்கோளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கென காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில் ஒன்று சேர்ந்து இந்த நிதிமூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது பற்றியோசிக்காமல்,வெறுமனே விவாதித்துக் கொண்டிருப்பதில் எவ்வித பயனும்கிடையாது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கையின் இறைமைபற்றி விவாதித்துக் கொண்டிருக்கத்தேவையில்லை என்றும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமதுரையில் மேலும் கூறினார்.

இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமிழினத்துக்கே பெரும் அவமானமான ஒருவர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் பாராளுமன்றத்தில் சமாதான முயற்சிகள் தொடர்பான முழுநாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

ஈழவேந்தனின் உரை குறித்து தமது உரையில் பிரஸ்தாபித்த அமைச்சர் கதிர்காமர் இவ்வாறான உரை ஒன்றுக்குப்பதிலளிக்கவேண்டிய அவசியம் தமக்குக்கிடையாது என்றார்.

# இலங்கையின் தேசியத்தை அழிக்க உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சதி

## ஜாதிகஹெல உறுமய பா.உ. உடவத்த அனந்ததேரர்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் உருவாக்கப்படவிருக்கும், பொதுக்கட்டமைப்பு நாட்டைக் காட்டிக்கொடுப்பதற்கு வழி வகுக்குமென ஜாதிகஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நேற்றையதினம் கட்டுகஸ்தோட்டவில் நடைபெற்ற சமயநிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் உடவத்த அனந்த தேரர் இவ்வாறு கூறியுள்ளார். விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் நாட்டையும், நாட்டுமக்களையும் காட்டிக் கொடுப்பதாக அமைந்துவிடுமெனக் குறிப்பிட்டுள்ள அனந்த தேரர்,

பொதுக்கட்டமைப்பைப் பற்றி பெரிதாகப் பேசிவருபவர்கள், கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒரு வீட்டைக்கூட அமைத்துக்கொடுக்கவில்லையெனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசியத்தை அழிப்பதற்கு சர்வதேச ரீதியிலும், உள்நாட்டு ரீதியிலும் சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

54சிங்களக் குடும்பங்களும், 12 முஸ்லிம் குடும்பங்களும், 15 தமிழ் குடும்பங்களும் இருக்கும் அம்பாறை பிரதேசத்தில் புத்தர்சிலையை அமைப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமையையும், ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அனந்ததேரர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# மாணவி மீது பாலியல் பலாத்காரம் புரிந்த பிக்கு ஒரு மில்லியன் ரூபா ஆட்பிணையில் விடுதலை

(கொழும்பு)

பதினாறுவயது மாணவி மீது பாலியல் பலாத்காரம் புரிந்த பௌத்தபிக்கு கெட்மனே அமரகர்த்தி தேரர் ஒரு மில்லியன் ரூபா ஆட்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பௌத்த விகாரைக்கு வகுப்பிற்கு வந்த 16 வயதுடைய மாணவியை பாலியல் பலாத்காரம் புரிந்த பிக்குவை மாத்தறை சிறிலங்காப் பொலிசார் கடந்த 15ஆம் திகதி கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தியிருந்தனர்.

இந்த வழக்கை விசாரணை செய்த மாத்தறை நீதிமன்ற நீதிபதி கவிந்திர நாணயக்கார பௌத்த பிக்குவை ஒரு மில்லியன் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததுடன், பௌத்தபிக்குவின் கடவுச்சீட்டை பறிமுதல்செய்துள்ளார். பாதிக்கப்பட்ட மாணவியின் தந்தை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய இந்த பௌத்தமதகுருவை தாம் கைது செய்ததாக மாத்தறை சிறிலங்காப் பொலிசார் கூறியுள்ளனர். அந்த பௌத்தவிகாரையிலிருந்து 13 இறுவட்டுக்களையும், மதுப்போத்தல்களையும் சிறிலங்காப் பொலிசார் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# லால்காந்த-நந்தனகுணதிலக முரண்பாடு ஜே.வி.பிக்குள் உட்பூசல் அதிகரிப்பு

ஜே.வி.பி. சார்பு தொழிற்சங்கங்களுக்குத் தலைமைவகிக்கும் அமைச்சர் லால்காந்தவுக்கு எதிராக கட்சிக்குள்ளேயே பல்வேறு அதிருப்திகள் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொழிற்சங்கங்களுக்குத் தலைமை வகிக்கும் அமைச்சர் லால்காந்தவின் செயற்பாடுகள் கட்சியின் கொள்கைகளுக்கு விரோதமானவையாக அமைந்திருப்பதாகவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு ஆதரவான செயற்பாடுகளில் தொழிற்சங்கங்களை அவர் வழிநடத்திச் செல்வதாகவும் கட்சிக்குள் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக தலைமையிலான குழுவினரே, அமைச்சர் லால்காந்தவுக்கு எதிராக கட்சிக்குள் இவ்வாறான முறைப்பாடு ஒன்றைச் செய்திருப்பதுடன், அமைச்சர் லால்காந்தவை தொழிற்சங்கங்களின் தலைமைப் பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருப்பதாககட்சி வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

# 96 இலட்ச ரூபா தங்க நகைகள் இருந்ததால் வாகனம் பொலிசாரால் தடுத்து வைப்பு

## இருவர் மீது விசாரணை

(கொழும்பு)

புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த தனியார் வாகனம் ஒன்று ஓமந்தையில் வைத்து நேற்று முன்தினம் சிறிலங்கா பொலிசாரால் தடுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் அந்த வாகனம் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனத்தில் 96 இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் மறைத்து எடுத்துச்செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்தே இந்தவாகனம் தடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த வாகனத்தில் பயணம் செய்த இருவர் விசாரணைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

# அரசியல் இராணுவ இராஜதந்திரம் நிறைந்த புதிய இசை வடிவத்தைப் பேண வேண்டும்

**விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்**



(அலுவலக செய்தியாளர்)

அரசியல் இராணுவ இராஜதந்திரம் நிறைந்த ஒரு புதிய இசை வடிவத்தைப் பேணவேண்டிய தேவை எமக்கிருக்கின்றது. இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற படையணிகளின் இறுவட்டு வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன் போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எங்களுடைய மண்ணிலே போர்க்கால சூழலிலே போர்க்களத்திற்கு ஊடாக இசையைப் பிறப்பிக்கின்ற மரபை நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம். ஏனெனில் இசைக்கூடாக ஒரு அற்புதமான மனஉரத்தைப் பிறப்பிக்க முடியும். மன எண்ணங்களை ஒழுங்குபடுத்தமுடியும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. வினைத்திறனை அதிகரிக்க முடியும் மூளையின் கொள்ளளவை விரிவாக்க முடியும், கற்பனைத் திறனை அதிகரிக்க முடியும் எனப் பலவாறு ஆய்வுகளுக்கூடாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் 1990 களில் இருந்து இற்றைவரைக்கும் இந்த ஒலிப் பேழை நாடாக்களை வெளியிட்டு வருகின்றோம். அதற்கு ஊடாக ஒரு மரபை எங்களுக்கென்று உருவாக்கி இருக்கின்றோம். அந்த மரபினுடைய தொடர்ச்சியாக இன்று இந்த வெளியீடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

விடுதலைப்போராட்டத்தினுடைய பிரதானமான அடிப்படை ஆதார அம்சமான படை உருவாக்கம் என்பது மிக முக்கியமானது. சாள்ஸ் அன்ரனிப்படைக்கட்டமைப் போடு உருவாக்கப்பட்ட இந்தப் படையணிகள் உருவாக்கம் அதனுடைய விரிவாக்கம் வீச்சு என்பன இன்று உச்ச வளர்ச்சியைக் கண்டுள்ளது. அந்த வகையில் எங்களுடைய தேசியத்தினுடைய பிரதான வெளிப்பாடாக அதனுடைய காப்பரனாக தேசியப் படையணியாக பல்கிப் பெருகி இருக்கும் இந்தப் படையணியினுடைய விரிவாக்கம் தொடர்பான ஒரு வரலாற்று நிகழ்ச்சியை நாங்கள் சந்தித்துக் கொண்டு இருக்கின்றோம். இந்த நிகழ்ச்சியை நாங்கள் சரித்திர ரீதியாக எழுதிவிட்டுப் போகலாம். ஆனால் நாங்கள் இன்று சமகாலத்திலே இவற்றினை உணர்வோடு அறிவிப்பதற்காக இந்த இசை மரபை பயன்படுத்துகின்றோம்.

இது எமக்குள்ள தனி மரபாக மாறிக்கொண்டு வருகின்றது. இந்த மரபு போருக்குரிய மரபு எனவே இந்தக் காலகட்டம் முடிவுக்கு வந்து அடுத்த கட்ட பாய்ச்சலின் போது இன்னும் எழுச்சியுள்ள மாற்றமுள்ள ஒலி நாடாக்களை உருவாக்க வேண்டிய ஒரு கட்டுப்பாடு எமக்குள்ளது. அதிலே அரசியல், இராணுவம், இராஜதந்திரம், உளவியல் எல்லாமே இணைந்த ஒரு புதிய இசை வடிவத்தைப் பேண வேண்டிய தேவை எமக்கிருக்கிறது. ஆகவே, இன்றைய இந்தப் படையணிகளின் ஒலிப்பேழைகள் யாவும் எங்களின் போராட்டத்தினுடைய தொடர்ச்சியான வெளிப்பாடாகவே அமைகிறது. இவற்றுக்கப்பால் மிக விரைவிலே இன்னொரு புதிய பாய்ச்சலுக்கான ஆயத்தங்களை நாங்கள் செய்ய வேண்டும். அதன் காரணமாகத் தான் நாம் மௌனமாக காத்துக் கொண்டிருக்கின்றோம். அதாவது, இசை என்பது ஒலிக்கும் மௌனத்திற்கும் இடைப்பட்ட ஒரு மொழியாக கருதப்படுகின்றது. இன்றைக்கும் நாம் மௌனமாகத்தான் இருக்கின்றோம். ஆனால் மௌனத்திற்கூடாக நாங்கள் பேசிக் கொண்டிருக்கின்றோம். இந்த மௌனத்தை கலைப்பதற்காக இந்த இரு ஒலி நாடாக்களும் இங்கு வெளியிடப்படுகிறது. இவற்றுக்கூடாக சில செய்திகளையும் பழைய ஞாபகங்களையும், மீட்டுக் கொள்ள முடியும். போர்க் காலத்தில் நன்மை தீமைகள் என்பன இருக்கிறது.

ஆகவே இந்த தீமையில் இருந்து மீள்வதற்கான ஒரேஒரு வழி இந்த கலையினுடைய தன்மையை உள்வாங்கிக் கொள்வதே. ஆகவே இன்று இந்தக் கலை இலக்கியப் பாங்கை எமக்கு ஏற்றவாறு நாம் மாற்றியமைக்கின்றோம். கலை என்பது அரசியல் மொழிக்கு வீச்சாக அமைகிறது. இந்த ஒலிப் பேழையிலே வெற்றிக்குரல் வெளிப் படுகின்றது. இந்தக் குரல் வெற்றியை அடையவேண்டிய குரலாக இருக்கிறது.

இன்று வெளி வரும் இசைப் பேழைகள் யாவும் நாளை வரப் போகும் பரந்த உலகின் கருவாக அமைகிறது. இவை எமக்கு ஒரு ஊன்று கோலாக இருக்கிறது. இந்த ஊன்று கோலைப் பயன்படுத்தித்தான் அடுத்த வெற்றி அமையப் போகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ச.தீ)

## கும்பாபிஷேகம்

(அலுவலக செய்தியாளர்)

சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக முற்றாக சேதமாக்கப்பட்ட கிளிநொச்சி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் இன்று இடம் பெறுகின்றது.

கிளிநொச்சி வாழ் பொதுமக்களினாலும், தனவந்தர்களினாலும் இவ்வாலயம் தற்போது மீளவும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் விழா ஏற்பாட்டுக்குழுவினர் வேண்டியுள்ளனர். (சோ)

# வவு. நெளுக்குளத்தில் இருந்து இளைஞரின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் குளத்தில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மாலை குளத்தில் கரை ஒதுங்கிய சடலம் தொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து நேற்றுக்காலை வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.சி. அபேசிங்கபண்டா மற்றும் மேலதிக நீதவான் எஸ்.சிற்றம்பலம் தளத்திற்குச் சென்று பார்வையிட்டனர் மேலதிக நீதவான் விசாரணைகளினை மேற்கொள்ளுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க இச்சடலம் சிதைவடைந்த நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளது வெள்ளை அரைகாற்சட்டை அணிந்திருந்தார் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னர் இவர் இறந்திருக்கலாம் என்று பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இதுவரை மேற்படி நபர் அடையாளம் காணப்படவில்லை என்று வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர். (21)

## அரசியல்...

எடுத்துச் சென்றவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் உந்துருளியில் தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

## வீரவணக்கம்...

பாணம்). என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்துள்ளார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## கைவிடப்பட்ட....

இதனிடையே குறித்த பெண்ணை கொலை செய்ப்பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும். இரு பொல்லுகளும் அதே புதைகுழியினுள் இருந்து மீட்கப்பட்டுள்ளது. எலும்புக்கூட்டின் வலது கையின் இரு விரல்கள் இல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்கின் கடற்கரைப்பகுதியிலிருந்து சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரப்பகுதியில் அமைந்துள்ள இம்மணற்பிட்டிப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் எதுமில்லாதுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (21)

## இசைப்....

கொடியினை அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நிதர்சனப் போராளி வீராவின் தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வில் வரவேற்புரையினை நிதர்சனப் பொறுப்பாளர் பிரமிளா நிகழ்த்த, சிறப்புரையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே பாலகுமாரன் நிகழ்த்தினார்.

ஜெயந்தன் படையணியினரின் "வெல்லும் வரை செல்வோம்" பாடல் இறுவட்டினை ஜெயந்தன் படையணித் தளபதி சாந்தன் வெளியிட்டு வைக்க, தமிழக ஓவியர் புகழேந்தி பெற்றுக்கொண்டார். அடுத்து சோதியா படையணியின் "விழி நிமிர்த்திய வீரம்" இறுவட்டினை சோதியா படையணி தளபதி மதுரா வெளியிட்டு வைக்க, நாவண்ணன் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் குயிலின்பன், மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளந்திரையன் ஆகியோர் சிறப்புப் பிரதிகளை வெளியிட்டு வைக்க, இசையமைப்பாளர்கள், கலைஞர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் பெற்றுக் கொண்டனர். இப் பாடல் தொகுப்புக்களின் மதிப்பீட்டுரையினை கு.மணிமேகலை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் போராளிகள், வர்த்தகர்கள், கலைஞர்கள், பொது மக்கள் எனப் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். (ச.தீ)

## அரசாங்கம்....

தலைமை யகத்தில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்தப்பட்டுள்ளது. மாநாட்டின் முடிவில் கலந்துரையாடல் பற்றிய விபரங்கள் யாவும் சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும். சனாதிபதி புத்தர்சிலை விவகாரம் குறித்து தீர்க்கமான முடிவொன்றை எடுப்பார். அம்முடிவு விரைவில் அறிவிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன தெரிவித்தார்.

"இதேவேளை மூன்று தினங்களுக்குள் புத்தர்சிலையை அகற்றும்படி கோரி நடத்தப்பட்டு வரும் கதவடைப்புப் போராட்டத்தை இடைநிறுத்தி வைக்கின்றோம். அதற்கிடையில் புத்தர்சிலையை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அல்லது கதவடைப்புப் போராட்டத்தை விஸ்தரிக்க வேண்டிவரும்." என்று திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வி.விக்னேஸ்வரன் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

காலை 11 மணியளவில் மாநாடு ஆரம்பமாகியது. அரச தரப்பில் மாநாட்டில் ஆயுதப்படைகளின் கூட்டுத்தளபதியும், கடற்படைத்தளபதியுமான ரியர் அட்மிரல் தயாசந்தகிரி, விமானப்படைத்தளபதி டொனால்ட் பெரேரா, இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொட, பொலிஸ்மா அதிபர் சந்திராபெர்னாண்டோ, கிழக்கு பிராந்திய பொலிஸ் பிரதிமா அதிபர் நெவிலவிஜேசிங்க மற்றும் பிராந்திய மட்ட, இராணுவ பொலிஸ் உயரதிகாரிகள் பங்குபற்றினர்.

புத்தர்சிலையை வைத்த அமைப்பான முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் கீர்த்தி பிரியலால் மற்றும் பௌத்த மதகுரு ஆகியோர் மாநாட்டில் பங்குபற்றவில்லை. வேறு பௌத்த மதகுருமார்களும் பங்குபற்றவில்லை.

இந்து மதகுருமார்களான வேதாகமமாமணி ரவிச்சந்திரகுருக்கள், ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்கதேசிகர், பிரம்மசிறி விக்னேஸ்வரக் குருக்கள், வண பிதா ஜோர்ஜ், திஸநாயக்கா, வண பிதா அன்னதாஸ், திருமலைப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தலைவர் ஜெய்னுலாப்தீன் தலைமையில் இஸ்லாமிய பிரமுகர்கள் மாநாட்டில் பங்குபற்றினர். திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் வ.விக்னேஸ்வரன் ஏ.எஸ் குணரத்தினம், எஸ்.கௌரிமுகுந்தன் ஆகியோரும் சட்டத்தரணி கா.சிவபாலன், திருகோணமலை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் து.தவசிலிங்கம் ஆகியோரும் பங்குபற்றினர். திருகோணமலை மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஜே.வி.பியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜெயந்தவி ஜயசேகரா மாத்திரமே மாநாட்டில் பங்குபற்றினார்.

"புத்தர்சிலை வைக்கப்பட்டது சமயப் பிரச்சினை அல்ல; அது ஒரு சட்டப் பிரச்சினை. பௌத்த சமயத்தை, பௌத்த பெருமானை நாம் மதிக்கின்றோம் என்று சட்டத்தரணி கா.சிவபாலன், ஒன்றியத்தின் தலைவர் தவசிலிங்கம், வண.அன்னதாஸ் அடிகளார் மாநாட்டில் தங்களின் கருத்துக்களை வெளியிட்ட போது கூறினர்.

"தற்போது மீன் சந்தை, இறைச்சிக்கடை, மதுபானக் கடைகளுக்கு மத்தியில் புத்தபெருமானின்சிலை வைக்கப்பட்டுள்ளது. பரிசுத்தமான, பொருத்தமான இடத்தில் புத்தபெருமானின் சிலை வைக்கப்பட வேண்டும். அவ்வாறு வைக்கப்படும் போது நாங்களும் அந்நிகழ்வில் பங்குகொள்வோம்" என்று அவர்கள் கூறினார்கள்.

"சமாதானத்தை உறுதிசெய்ய வேண்டும். நல்லதொரு இடத்தில் புத்தபெருமானின் சிலையை வைப்பதற்கு நாம் எல்லோரும் உதவுவோம்" என்று வேதாகமாமணி ரவிச்சந்திரகுருக்கள் தெரிவித்தார். இஸ்லாமியத்தூதுக்குழுவின் சார்பில் பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் ஜெய்னுலாப்தீன் கருத்து தெரிவிக்கையில்; புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அப்போது தான் நீதிமன்றத்தில் சிறுபான்மையினருக்கு நம்பிக்கை ஏற்படும் என்றார்.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் பேசும் போது, விளாங்குளம், தம்பலகமம், 13 ஆம் கட்டையாகிய தமிழர் பகுதிகளில் பௌத்த கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. அதனை தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை. இப்போது திருமலை நகரில் பொருத்தமற்ற இடத்தில் புத்தர் சிலை அமைக்கப்பட்டதையே நாம் எதிர்க்கின்றோம் என்று கூறினார். தற்போதைய இடத்தில் இருந்து புத்தர் சிலையை அகற்ற வேண்டும். அதுசமாதானத்தை ஸ்திரப்படுத்த உதவும் என்றும் அவர் கூறினார்.

மாநாட்டின் முடிவில் சனாதிபதியின் தீர்க்கமான முடிவு எப்போது அறிவிக்கப்படும் என்று தெரிவிப்பீர்களா என்று விக்னேஸ்வரன் கேட்டதற்கு "எப்போது என்று என்னால் உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் விரைவில் தெரியவரும்" என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜெயவர்த்தனா பதிலளித்தார்.

மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் திருமலை அமைப்பாளர் ஆரியவதியும் பங்குபற்றினார்.

மாநாட்டின் பின்னர் படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், திருமலை ஜெயசுமணராமய விகாரையின் பௌத்த மதகுருமார்களை சந்தித்து புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (25)


## அறிவித்தல்

தமிழீழ வைப்பகம்

1996.05.14 ஆம் நாள் முதல் இரணைப்பாலை வீதி புதுக்குடியிருப்பில் இயங்கி வரும் தமிழீழ வைப்பக முல்லைத்தீவுக்கிளை 2005 .05.23 ஆம் நாள் தொடக்கம் தமிழீழ வைப்பகம் புதுக்குடியிருப்புக் கிளை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வழமையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

மேலாண்மைப்பணிப்பாளர்,
தமிழீழ வைப்பகம்.

(சி.11974)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளிமிடப்பட்டது.



# அருள் மிகு ஸ்ரீ சித்தி


## மகா கும்பாபிஷேகப் ம

### கிளிநொச்சி பழையபஸ்நிலையம்-யாழ்சாலை
### அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்.
### ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்ச குண்டபட்ஷ
### மகாகும்பாபிஷேக சிறப்பு மலர் 22-05-2005



தர்மகாரியங்களில் மிக உயர்ந்ததாகக் கருதப்படும் செயல் திருக்கோயில் கட்டுதலும், திருப்பணிகள் செய்தலுமாகும்-எங்கு தர்மம் உண்டோ அங்கே வெற்றி நிச்சயம்- தர்மத்திலிருந்தே பொருள் இன்பம் அனைத்தும் பிறக்கின்றது- நம் நாட்டில் இத்தகைய தர்மத்தைப் போற்றி அரும்பணி ஆற்றுபவர்கள் ஒரு சிலராவது இருப்பது நாடு செய்த தவப்பயனாகும்-திருக்கோயில்கள் அன்னசத்திரங்கள், பொதுக் கிணறுகள், இலவசக் கல்விக் கூடங்கள், வைத்தியசாலைகள், தர்மஸ்தாபனங்கள் யாவும் இவ்வுண்மையை எடுத்துக்காட்டி நிற்கின்றது- தர்மம் என்ற சொல் பலவித பொருட்களைக் கொண்டது. பொதுவாக வேதங்களும் அவற்றைத்தழுவிய நூல்களும் எதைச்செய் என்று கூறுகின்றதோ அதுவே தர்மம். எதைச் செய்யாதே என்று கூறுகின்றதுவோ அது அதர்மமாகும். ஆன்மீக அறிவில் வேதாந்தத்தின் உயர்ந்த கருத்துக்களைக் கேட்பதே முதற்படி-இரண்டாவது படி மனனம்-அகன்ற யானைக்காதுகளும் பெரிய தலையும் கொண்ட கணபதி இந்த இரண்டு ஆன்மீகப் பயிற்சிகளுக்கும் ஞானச் சுரங்கமாக விளங்குவதையும் உணர்த்துகின்றது. அறிவிலும் ஞாபக சக்தியிலும் சிறந்த யானையின் தலை இதற்கேற்ப விநாயகரின் சிரமாக அமைந்துள்ளது. அவர் கொண்டிருக்கும் தும்பிக்கை எதையும் தேடி எடுத்து அலசும் பான்மை கொண்டது ஞானவான்கள் நல்ல விடயங்களை அப்படித் தேடியே எடுத்துக் கொள்ளவார்கள்-தும்பிக்கையானது சீரிய புத்தியின் அடையாளமாகத் திகழ்கின்றது. ஆகவே இத்துணைப் பெரிய விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகத்தில் கலந்து இடர்நீங்கி இன்பப் பெருவாழ்வு வாழ்வோமாக .

சிவாகமக் கிரியா தத்வநிதி
சிவஸ்ரீ.கு.இரத்தினேஸ்வரக் குருக்கள்
பிரதம சிவாச்சாரியார் முருகன் -ஆலயம், கிளிநொச்சி.





### ஆசிச் செய்தி

அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியுறுவதுடன் ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்புற இடம் பெறவும் போரின் வடுக்களைச் சுமந்து நிற்கும் கிளிநொச்சி மாவட்டமானது அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகரின் அருளினைப் பெற்று செழித்தோங்கவும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**செல்வி. க. சுலோஜினி,**
**உதவி அரசாங்க அதிபர்,**
**கரைச்சி, கிளிநொச்சி.**

குறிப்பு:- மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலா பிஷேகம் நடைபெறும். மண்டலாபிஷேகத்தில் பங்கு கொள்ள விரும்பும் அடியார்கள் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

**மகா கும்பாபிஷேகம் பார்த்திப வருடம் வைகாசித்திங்கள் 8ஆம் ந**
**சதுர்த்தசித்திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய இன்று கா**



**கணபதே நம: ஆசியு**

விநாயக வணக்கம் எல்லாப்புற மதங்களாலும்
நடைமுறையிலிருப்பது-சகலரும்-அறிந் -உண்மை.
மெய்யடியார்களின் துன்ப துயரங்களை நிவிர்த்
மீண்டும் பிறவாத தன்மை ஆன்மாக்களுக்கு நல்கு
மக்கள் அனுபவிக்கும் துன்பம் அளவிடற்க
உள்ளத்துடன் பஞ்சமாபாதகங்களை-செய்யாது இ
தருமம், தன்னலமற்ற சேவை செய்யவேண்டும்.
எமக குத்தந்துள்ளார், இம் மனித உடம்பினால்
நகரத்தின் மையப்பகுதியில் கோயில் கொண்டிருக்கும் விநாயகர் ஆல
இவ்வாலயத்தை ஓர் சில உத்தமர்கள், பல இலட்சம் ரூபாசெலவு-செய்
கிழமை காலை மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. அத்தருணம் சகல
வேண்டும். விக்கினங்களைத்தீர்ப்பதால் விக்கினேஸ்வரன் என்னும்
நமக்குத்தருவதால் சித்திவிநாயகர் எனும் திருநாமம் ஆயிற்று, ஆசியு
தெரிவிக்கின்றோம்.

**கணேசானந்த மகாதேவசுவ**
**இறைபணியில்.**


## விளம்பர அனுசரணை

**உண்மை விளக்கம் புத்தகசாலை**
இல.6 திருநகர் வீதி, கிளிநொச்சி.

**கலைமகள் புகைப்படக் கலையகம்**
திருநகர் வீதி, கிளிநொச்சி.

**சக்தி பல்பொரு**
திருநகர் வீதி,

**பிள்ளையார் மருந்தகம்**
யாழ்.சாலை, கிளிநொச்சி.

**எஸ்.கணேஸ்குமார்**
**மகேந்திரன் இரும்பகம்**
கண்டி வீதி, கிளிநொச்சி.

**குமரன் பு**
யாழ்.சாலை, கி

**அருள்மணி பல்பொருள் வாணிபம்**
யாழ்.சாலை, கிளிநொச்சி.

**சுமங்கலி நகைப் பூங்கா**
கண்டி வீதி, கிளிநொச்சி.

**எழிலகம் மின் இ**
**கட்டடப் பொரு**
புகையிரத வீ



**அமரசிங்கம் சண்முகநாதன்**
**450 திருநகர், கிளிநொச்சி.**
**வைத்தியநாதன் குமாரசாமி**
**சுமங்கலி நகைப்பூங்கா**
**சிவா ரேடிங் கொம்பனி**
கண்டி வீதி கிளிநொச்சி.

# ...தி விநாயகர் ஆலயம்

## ...பெரு விழா -22-05-2005-





...8ஆம் நாள் (22.05.2005) ஞாயிற்றுக்கிழமை
...று காலை 6.30 மணி முதல் காலை 8.00 மணிவரை.

...சியுரை

...ாலும் வழிபடும் வழக்கம் ஆதிகாலம் தொடக்கம் ...ண்மை.-எனவே காலத்திற்குக்காலம் தேவைக்கேற்ப ... நிவிர்த்தி செய்து தமது பாதங்களில் இணைத்து ... நல்குகின்றார் இறைவன். எனவே இக்கலியுகத்திலே ...விடற்கரியது. அதற்கு பிராயச்சித்தம் பரிசுத்த ...யாது இறைதொண்டு,ஜெபம், பிரார்த்தனை, தியானம், ...ண்டும். ஆகவேதான் மானிட ஜென்மத்தை இறைவன் ...ினால்தான் கடவுளை அடைய முடியும். கிளிநொச்சி ... ஆலயம் கடந்த கால அனர்த்தங்களால் சீரற்றது. ...வு-செய்து புனரமைப்புச்செய்து, 22.05.2005ஞாயிற்றுக் ...ம் சகலமக்களும் மகாகும்பாபிஷேக தர்சனை செய்ய ...னும் திருநாமம் ஆயிற்று, சகல சித்துக்களை ... ஆசியுரை கேட்டுவந்த அன்பர்களுக்கும் நல்லாசி

...ந்தவசுவாமிகள்



**கிளிநொச்சி நகரின் மத்தியில் வீற்றிருக்கும் அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய குடமுழுக்குப் பெருவிழாவின்போது கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் அரச அதிபர் உயர் திரு தி. இராசநாயகம் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி**

"நாடிவரும் நல் அடியார்க்கு நல்லருள் புரியும் நகரத்து விநாயகன்"
வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ
பான்மை தரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நாவாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலிகள் செய்விப்பதாம்.

கிளிநொச்சி மாநகரின் மத்தியில் பழைய பேருந்து நிலையம் முன்பாக அமர்ந்து நாடிவரும் அடியவர்கட்கு நல்லருள் புரியும் ஐங்கரப் பெருமானுக்கு புதிய ஆலயம் அமைத்து குடமுழுக்கு நடைபெற திருவருள் பாலித்ததையிட்டும் பெருமகிழ்வடைகின்றோம்.

கிளிநொச்சி நகரம் போரினால் பாதிப்புற்று, பேரழிவுற்று, பொலிவிழந்து இன்று நகரம் புதுப்பொலிவோடு புனரமைக்கப்பெறுகின்றது. இவ்வேளையில் நகரத்தில் வாழும் அன்புள்ளங்களாலும், வணிகப் பெருமக்களினாலும் இவ்வலாயமும் புனரமைக்கப்பெற்று குடமுழுக்கு நடைபெற இருப்பது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வெல்வினையை வேரறுக்கும் வேழமுகத்தானை நாள்தோறும் வேண்டித் தொழுபவர்கள் பலர். இவ்வலாயம் எமது அரச செயலகத்திற்கு அருகாமையில் இருப்பதனால் எமது செயலக அலுவலர்கள் பலரும் எம்பெருமானை வழிபட்ட பின்பே தம்பணி தொடங்குவர், வணிகப் பெருமக்கள் இவரை வாயார அழுத்திய பின்பே தம் வழமையான தொழிலை ஆரம்பிப்பர்.

வேண்டுவார் வேண்டுவன ஈயும் விநாயகப் பெருமானின் ஆலய குடமுழுக்கு விழா சிறப்புறவும் பல துன்ப துயரங்களுடன் இடம்பெயர்ந்து வாழ்ந்து இன்று நகரில் மீளக்குடியமரும் மக்களின் துன்ப துயரங்கள் நீங்கவும் எம்பெருமான் அருள்வேண்டி இறைஞ்சுகின்றேன்.

**தி. இராசநாயகம்,**
**மாவட்டச் செயலர் அரச அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

## ஆசிச் செய்தி



சர்வதேசப் புகழ்பெற்ற கிளிநொச்சி மாநகரில் புனரமைக்கப் பெற்றுள்ள அருள் மிகு சித்தி விநாயகராலயக் குடமுழுக்கு விழாவின் ஞாபகார்த்தமாக ஈழநாதம் பத்திரிகையில் வெளியிடும் சிறப்புமலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த, வேண்டத்தகாதவொரு யுத்த மொன்றினால் மக்களின் சொத்துக்கள், சொந்தங்கள் யாவும் அழிக்கப் பெற்றுள்ளன. அவ் வழிவுகளுக்குள் ஆலயங்களும் விதிவிலக்காக அமையவில்லை இச்சித்திவிநாயகராலயமும் பேரழிவுக்குட்பட்டிருந்தது.

சமாதான காலம் ஆரம்பித்தவுடன் இவ் ஆலயப் புனரமைப்பு வேலைகளை வர்த்தகப் பெருமக்களும், பொதுமக்களும் இணைந்து பெரும் பங்களிப்புடன் பூர்த்தி செய்துள்ளனர். அழகானதொரு ஆலயமாக அமைத்துள்ளனர்.

இவ்வுலக வாழ்வில் எல்லோரும் இன்புற்று வாழவே விரும்புவர். இன்ப வாழ்வு வாழவேண்டுமாயின் இறைவழிபாடு மூலமே அதனைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இவ்வாலயத்தில் நாளாந்த நித்திய, நைமித்தியப் பூஜைகள்யாவும் சிறப்பாக அமைந்து எல்லோருக்கும் நல்லருள் பாலிக்க எல்லாம் வல்ல விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமான் பேரருள் புரிவாராக,

"எண்ணுவார் நெஞ்சில்
நன்னவான் ஈசன்
"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்"

பொன்.நித்தியானந்தம்.,
விசேட ஆணையாளர்.,
கரைச்சி, கிளிநொச்சி.

## ...ணையாளர்கள்


...ருள் வாணிபம்
...தி, கிளிநொச்சி

முத்துமாரி நகைமாடம்
திருநகர் வீதி, கிளிநொச்சி.

புலியரசன் அழகுமாடம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

...டைவையகம்
...ல, கிளிநொச்சி.

கற்பகம் இன் சுவையகம்
கண்டி வீதி, கிளிநொச்சி.

செந்தமிழ் பாதணி அழகுபொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

...ர் இலத்திரனியல்
...ருள் வாணிபம்
...த வீதி, கிளிநொச்சி.

துரை பல் பொருள் வாணிபம்இலத்திரனியல்
அழகு பொருள் வாணிபம்
புகையிரத வீதி, கிளிநொச்சி.

முத்துப் பிள்ளையார் வண்ணச் சோலை
யாழ்சாலை, கிளிநொச்சி.
துணுக்காய் சாலை, மல்லாவி.






லலிதா ரேடிங் கொம்பனி
பரவிப்பாஞ்சான் வீதி, கிளிநொச்சி.

தர்மினி உணவகம்
(தாமரை)
புகையிரத வீதி, கிளிநொச்சி.

